


32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059 www.vlambaram.com

email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 32 பாலம்: 09 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 01, 2022

# கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு

2021 செப்ரெம்பர் 20இல் நடைபெற்ற கனடிய மத்திய அரசிற்கான பொதுத் தேர்தலில் கனடியப் பழமைவாதக் கட்சி மொத்தமாக இருந்த 338 ஆசனங்களில் 119 ஆசனங்களைப் பெற்று மீண்டும் உத்தியோகபூர்வமான எதிர்க்கட்சியாகக் கனடிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவானது.

பழமைவாதக்கட்சித் தேர்தலுக்கு முன்னர் வைத்திருந்த ஆசனங்களைவிட இது இரண்டு ஆசனங்கள் குறைவாக இருந்தாலும் தாங்கள் லிபரல் கட்சியை பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சி யமைக்காமல் செய்தது தமது வெற்றியே என அப்போதைய பழமைவாதக் கட்சியின் தலைவர் Erin O'Toole அப்போது ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆனால், 2022 பெப்பிரவரி 2இல் பழமைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் பழமைவாதக் கட்சியின் தலைமைப் பதவி 73:45 என்ற 28 அதிகப்படியான வாக்குகளால் Erin O'Tool இடமிருந்து பறிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து Candice Bergen கனடியப் பழமைவாதக் கட்சியின் இடைக்காலத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1964 செப்ரெம்பர் 28இல் Morden, மனிற்ரோபாவில் பிறந்த Candice Marie Bergen 2008ஆம் ஆண்டில் இருந்தே மனிற்ரோபாவில் உள்ள Portage - Lisgar தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். Harper அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த இவர் பழமைவாதக் கட்சியின் உப தலைவராகவும் இருந்தவர். தற்போது பழமைவாதக் கட்சியின் இடைக்காலத் தலைவராகவும், கனடிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்து வருகிறார். Candice Bergenஇற்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பேரப்பிள்ளைகளும் முதல் திருமணத்தின் மூலம் இருக்கின்றனர். Candice Bergen 2020 ஒக்ரோபர் 11இல் Michael என்பவரை இரண்டாவது திருமணம் செய்துள்ளார். தனக்கு பிரெஞ்ச் மொழியில் போதிய அளவு பாண்டித்தியம் இல்லாதபடியால் தான் பழமைவாதக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை எனவும் அதனாலேயே இடைக்காலத் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்வதாகவும் இவர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

பழமைவாதக் கட்சி 2022 ஏப்பிரல் 19ஆம் திகதிக்கு முன்னர் கட்சித் தலைமைப் பதவிக்குப் போட்டியிட விரும்புவோர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும் எனவும், ஏப்பிரல் 29இற்கு முன்னர் கட்டுப்பணத்தையும், போதிய அளவு உறுப்பினர்களின் ஆதரவையும்


Candice Bergen

Thanks Wikipedia

காட்ட வேண்டும் எனவும் அறிவித்துள்ளது. கட்சித்தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்கு இடையேயான விவாதம் மே 5ஆம் திகதியும் மே 11ஆம் திகதியும் நடைபெற உள்ளது. இவர்களுக்கிடையேயான பிரெஞ்ச் மொழி மூலம் நடைபெறும் விவாதம் மே 25ஆம் திகதி நடைபெறும். கட்சித்தலைவர் தெரிவு செப்ரெம்பர் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதுவரை எண்மர் கட்சித்தலைமைக்குப் போட்டியிடுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பித்துள்ளனர். இவர்கள் ஏப்பிரல் 29ஆம் திகதிக்கு முன்னர் தங்களது கட்டுப்பணமாக $300,000 முற்று முழுதாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஒவ்வொரு வேட்பாளரும் குறைந்தது 500 கட்சி உறுப்பினர்களிடம் இருந்து ஆதரவுக் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தவர்களே கட்சித்தலைமைப் பதவிக்குப் போட்டியிடுபவர்களுக்கான விவாதத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.


கட்சித்தலைமைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டிய $300,000 கட்டுப்பணத்தில் வேட்பாளர்கள் கட்சித்தலைவர் தெரிவு நடைபெற்ற பின்னர் அவர்கள் சமர்ப்பிக்க வேண்டி பத்திரங்கள் எல்லாம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் $100,000 அவர்களுக்கு மீளளிக்கப்படும்.

கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர் தங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் திகதியின் போது குறைந்தது ஆறு மாதமாவது கனடியப் பழமைவாதக் கட்சியின் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும். அதேபோலக் கட்சியின் தலைமைப்பதவிக்குப் போட்டியிடுவோரைத் தெரிவு செய்யும் வாக்காளர் 2022 யூன் 03ஆம் திகதிக்கு முன்னர் கனயடிப் பழமைவாதக் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்திருக்க வேண்டும்.

கனயடிப் பழமைவாதக் கட்சியின் தலைவர் தெரிவு கனடா முழுவதிலுமுள்ள 338 தொகுதிகளுக்கு சமஉரிமை கொடுக்கப்பட்டு நடத்தப்படுகிறது. அதாவது ஒவ்வொரு தொகுதியிலும் மொத்த வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையினை 100ஆகக் கணக்கில் எடுத்து ஒவ்வொரு வேட்பாளருக்கும் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.

இவ்வாறே 338 தொகுதிகளிலும் நடை


(தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)






















EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in-Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham
$1,588,888
4+1 BR , 4 WR
Markham Rd/Denison St
SOLD
HIGHEST SOLD
PRICE ON THE STREET *
Semi-D- 4BR,4WR, Fin Bsmt,Sep E
Kingston Rd/ McCowan Rd
$2,899,000
Detached - BR: 5+5 WR:5
Lindsay
$399,000
Residential Land
Whitby
$1,098,900
Brand New - 3BR + 3WR
Midland Ave/ Kingston Rd
$659,900
2BR 2WR
Chinguacousy Rd & Wanless Dr
Brand New
Home in Brampton.
Closing Feb 2024.
$1,299,900
Semi-Detached BR: 3 WR: 4
Jane/Rutherford
FROM $ 599,000
10 UNITS
AVAILABLE
BR: 1 WR:1 Assignment Sale


கடந்த சில ஆண்டுகளாக ஒன்டாரியோவில் நாம் பல சிரமங்களை அனுபவித்துள்ளோம்.
ஆண்ட்ரியாவிடமும் அவரின் NDP கட்சியிடமும் உள்ள திட்டங்கள்:
■ மருத்துவ சேவையை சரிசெய்வது
■ முதியோர் பராமரிப்பினை சரிசெய்வது
■ அதிகரிக்கும் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளை கட்டுப்படுத்துவது
■ செலவுகளை சமாளிக்க கூடிய தொழில் வாய்ப்புகளை உறுதி செய்வது
சீரழிந்ததை சரிசெய்து, உங்களின் முன்னேற்றத்துக்காக போராடும் நேரம் இது.
Doly Begum
Scarborough Southwest
Veronica Javier
Scarborough -Guildwood
Justin Kong
Scarborough North
Felicia Samuel
Scarborough -Rouge Park
Neethan Shan
Scarborough Centre
STRONG. READY WORKING FOR YOU.
NDP NPD
ANDREA HORWATH
Authorized by the CFO for the Ontario NDP



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 606


# தடுமாறும் ஆதன வியாபாரம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

வட்டிவீத அதிகரிப்பு, அதிகளவு ஆதனங்களை சந்தைப்படுத்தல், 30 வருடத்தில் அதிகளவான பணவீக்கம் போன்ற காரணங்களும், மேலும் பல காரணங்களுமாக ஆதன வியாபாரம் தடுமாறுவதனைக் காணலாம்.

ஆதன வியாபாரம் எந்த திசையில் செல்லும் என்பதனை கணிக்க முடியாமல் இருக்கின்றது. மேலே குறிப்பிட்ட காரணங்கள் ஆதன வியாபாரத்தை மந்தப்படுத்தும். அத்துடன் விலையிலும் இறக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை ஆதன வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டோர் இலகுவாகக் கணிக்க கூடியதாக இருக்கும். எனினும் ரொறொன்ரோ பெரும் பாகத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் வியாபாரத்தைப் பார்க்கும்போது ஆதன வியாபாரம் தடுமாற்றம் அடைவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் கருத்து என்னவெனில், இந்தப் பகுதியின் சில சுற்றாடல்களில் ஆதன வியாபாரத்தின் விலை அதிகமாகவும், இன்னும் சில சுற்றாடல்களில் விலை 20%வரை குறைத்தும் விற்கப்படுகின்றது. இதற்கு காரணம் சொல்வது என்பது இலகுவல்ல. எனினும், அனுபவமற்ற வாங்குவோர், அவர்களின் முகவர்கள் மற்றும் பேராசைப்படும் விற்பனையாளர்களை காரணமாகக் கொள்ளலாமா?



இன்றும் சில முகவர்கள், அனுபவமற்ற முறையில் வாங்கல் - விற்றல் பத்திரங்களைக் கொடுப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

சந்தைப்படுத்தப்பட்ட ஆதனத்திற்கு, மேலதிகமாக ஒரு வாங்குபவர்கூட இல்லாத சந்தர்ப்பங்களிலும், கேட்கும் விலையை விட $100,000 இற்கு மேற்பட்ட (அதிக) விலையைக் கொடுப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. வேறு சில முகவர்கள் கேட்கும் விலையைவிட $300,000 குறைவாகக் கொடுத்து ஆதனம் வாங்குவதனையும் காணலாம்.

பெப்ரவரி 2022இல் சந்தைப்படுத்தப்பட்ட ஆதனங்களைவிட மார்ச் 2022இல் 42% அதிகமாக சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் விலை 2.6%இனால் அதிகரித்துள்ளது. ஏப்ரல் 07, 2022இல் கனடாவில் கொண்டு வரப்பட்ட வரவு-செலவு திட்டமும் ஆதன வியாபாரத்தை கட்டுக்குள் வைத்திருப்பதாக அமைந்திருந்தது. இவற்றின் பாதிப்பும் எதிர்காலத்தில்தான் தெரியவரும்.

2017இல் வெளிநாட்டவர்கள் ஆதனம் வாங்கும்போது 15% மேலதிக வரி செலுத்த வேண்டும் என ஒன்ராறியோ அரசு திட்டம் போட்டது. ஆனால், சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் வியாபாரம் ஸ்தம்பிதம் அடைந்தது. பிற்பாடு நிலைமை மாறத் தொடங்கியது. புதிய கனடிய வரவு-செலவுத் திட்டத்தில் இரு (2) வருடங்கள் வெளிநாட்டவர்கள் வாங்குவதற்குத் தடை போடப்பட்டுள்ளது. இது போன்ற பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் சரித்திரத்தில் குறைவான 0.25%ஆகக் கோவிட்-19இனால் குறைக்கப்பட்டது. 2020 மார்ச் தொடக்கம் ஏறக்குறைய இரு வருடங்கள், இந்த மிகக் குறைந்த வட்டி வீதம் ஆதன வியாபாரத்தில் மிகப்பெரிய பாய்ச்சலை ஏற்படுத்தியது.


இப்பொழுது பணவீக்கம் (Inflation Rate) கடந்த 30 வருடங்களில் அதிகமாகக் காணப்படுவதால், அரசு வட்டி வீதத்தை அதிகரிப்பதுடன் அதனை மிகவும் துரிதமாகவும் செயல்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. கடந்த இரு வருடங்களில் முதலாவது வட்டி வீத அதிகரிப்பு மார்ச் 02, 2022இல் 0.25%இனால் அதிகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 13, 2022இல் மேலதிகமாக 0.5% அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. இதனால் இப்பொழுது கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 1% ஆகவும் முதன்மை வட்டி வீதம் 3.2% ஆகவும் காணப்படுகின்றது. இதனைத் தொடர்ந்தும், தொடர்ச்சியான வட்டி வீத அதிகரிப்பை எதிர்பார்க்கலாம். இதனால், ஆதன கடனைப் பெற்றவர்களில் மாறும் வட்டி வீதத்தை (Variable Rate) கொண்டுள்ளவர்கள் அதிக மாதாந்த கட்டுப்பணத்தை செலுத்த வேண்டியுள்ளது. இதனாலும் பலர் தமது ஆதனங்களை விற்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். எனினும், முதல் தடவை ஆதனம் வாங்குவோர் சந்தைக்கு வந்து கொண்டே இருப்பர். அவர்களினால் ஆதன வியாபாரம் ஓரளவு சமநிலைப்படுத்தப்படும். ஆனாலும், வியாபாரமாகக் கருதும் முதலீட்டாளர்கள் நிலைமையை அவதானித்துக் கொண்டே இருப்பர்.

எவ்வாறாயினும் 2022ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் ஒரு தடுமாறும் ஆண்டாகவே இருக்கும்.

## கனடா அளவில்

| வருடம் | ஆதன வியாபாரம் எண்ணிக்கை | சந்தைப்படுத்தப்பட்ட ஆதன எண்ணிக்கை | ஆதன சராசரி விற்ற விலை |
|---|---|---|---|
| மார்ச் 2021 | 76,264 | 105,290 | $715,696 |
| மார்ச் 2022 | 63,797 | 94,491 | $796,060 |







உ
Govt. Reg. No.571/2007
திருச்சிற்றம்பலம்
அன்னதான அறக்கட்டளை
அனைவரும் சாப்பிட வாருங்கள்!

இந்தியாவில் தமிழ்நாட்டில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலை தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு, திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளையில் தினமும் மதியம் இலவச அன்னதானம் வழங்கப்படுகிறது. 03/05/2022, செவ்வாய்க்கிழமை, சித்திரை - 20, அக்ஷயதிருதியை, 16-05-2022, திங்கள் கிழமை, வைகாசி - 2, பௌர்ணமி, 30-05-2022, திங்கள்கிழமை, வைகாசி - 16, அமாவாசை போன்ற முக்கிய விசேஷ தினங்களில் அன்னதானம் வழங்கலாம். தினமும் ஆயிரம் நபர்களுக்கு வடை, பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்கப்படுகிறது. இதற்கு இந்தியன் ரூபாய் 50,000 ஆகின்றது. தங்களால் இயன்றதை செலுத்தி இந்த தர்மத்தில் தாங்களும் முடிந்த அளவு பங்கு கொண்டு இதன் சிறந்த பலன்களை அடைய அன்புடன் அழைக்கின்றோம்.

நன்கொடைகளை செலுத்தி தங்கள் விலாசம் குடும்ப பெயர்கள் நட்சத்திரம் ராசி, கோத்ரம் எழுதி அனுப்பவும். ஸ்ரீ நடராஜரிடத்தில் தங்கள் குடும்பம் சங்கல்பம் பூஜை செய்துபிரசாதங்கள், முறையான ரசீது அனுப்பி வைக்கின்றோம். வாழ்க வளமுடன், வளர்க நலமுடன். ஆசிர்வாதங்கள்.

**C.NAVATHANDAVADEEKCHIDHAR**, 22/10, East Sannathi, Chidambaram - 608001. Tamil Nadu, India. **Mob: 93455 12976**

**Thiruchitrambalam Annadhana Trust**
State Bank of India A/c No.30263863248
Chidambaram Branch IFSC: SBIN0000823
e-mail: santhanasubramani1969@yahoo.com, anandhancdm2015@gmail.com
Google Pay: 93455 12976 (OmGanesh) Whatsapp: 93455 12979



# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com
**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# அமெரிக்கத் தூதுவரின் யாழ்ப்பாணப் பயணம்




கடந்த 24ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung) பல தரப்பினரை சந்தித்து உரையாடியுள்ளார். தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் முதலானோரை அவர் சந்தித்துள்ளார்.

முக்கியமாக அவர் சந்தித்த தரப்பினர் மற்றும் மேற்கொள்ளப்பட்ட உரையாடல்கள் குறித்து சுருக்கமாகப் பார்க்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் அவர் மேற்கொண்ட சந்திப்பில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.
அச்சந்திப்பில், முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்கினேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார்.

தொடர்ந்து, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் காணாமல் போனோரது உறவினர்கள் ஆகியோரையும் சந்தித்து அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இந்த சந்திப்புகள் குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலும் அவர் பதிவு செய்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்தால் மாத்திரமே அனைத்தையும் சாதிக்க முடியும் என அமெரிக்கத் தூதுவர் தமிழ் கட்சிகளின் தலைவர்களிடம் சுட்டிக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவை சந்தித்துக் கலந்துரையாடிய விடயங்கள், சந்திப்பின் பின்னரான நிலவரங்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

மேலும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தமிழ் பகுதிகளில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியில் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அவர் கேட்டறிந்தார்.



இக்கலந்துரையாடலின் போது, ஐ.நா. கூட்டத்தொடரில் அமெரிக்காவின் அழுத்தம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தாங்கள் கேட்டுக் கொண்டதாக ரெலோ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். இச்சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்காத, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்து சில விடயங்களை ஊடகங்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில், அதன் அடிப்படையில் ஏதாவது நன்மைகள் கிடைக்கப்பெற்றதா? என்பதான சில கேள்விகள் அமெரிக்கத் தூதுவரால் எழுப்பப்பட்டதாகவும், அதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சித்தார்த்தன் கூறிய பதிலில் தமக்கு உடன்பாடு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உத்தரவாதம் தந்துள்ளதால் அதனை கட்டாயம் ஜனாதிபதி செய்வார் என்ற அடிப்படையில் சித்தார்த்தன் தனது கருத்தை தெரிவித்ததாகவும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதானால் அதனை அவர் செய்திருக்கலாம் எனவே, சித்தார்த்தன் கூறியதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தார். தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்காமல் விட்டுவிட்டு காலக்கிரமத்தில் செய்வோம் என்று கூறுவதில் அர்த்தமில்லை என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். தற்போதைய பொருளாதார நிலைமைகளால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பது சம்பந்தமாகப் பல கேள்விகள் கேட்கப்பட்டதாகவும், அதற்கு தாங்கள் பதிலளித்ததாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை மக்களுக்கு தங்களால் செய்யக்கூடிய உதவிகளை அமெரிக்கா செய்யும் என அமெரிக்கத் தூதர் தெரிவித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதைவிட, தமிழ் பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள இராணுவம் சம்பந்தமாகவும் கேள்விகள் கேட்கப்பட்டதாகவும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பல ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் தம் வசம் வைத்திருப்பது சம்பந்தமாக கேட்கப்பட்டதாகவும், இவ்வாறு காணிகளை பிடித்து வைத்துக்கொண்டு இராணுவத்தினர் என்ன செய்கின்றனர் என்ற கேள்வியை அவர் கேட்டிருந்ததாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கான பதில்களை தூதுவருக்கு விளக்கியதோடு, தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்படுவது சம்பந்தமாகவும் பௌத்த ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் அவரது கவனத்திற்குத் தாங்கள் கொண்டு சென்றதாகவும் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். பின்னர், கடந்த செவ்வாய்க் கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை சந்தித்து அமெரிக்கத் தூதுவர் கலந்துரையாடினார். தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்று அமெரிக்கத் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் அமெரிக்கத் தூதுவரை சந்தித்த போது, பேசப்பட்ட விடயங்கள் குறித்து சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா கருத்து தெரிவிக்கையில், தங்கள் உறவுகள் காணாமலாக்கப்பட்ட விதம், தங்கள் போராட்டங்கள், தங்களுக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவரிடம் விளக்கிக் கூறியதாகவும், அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தங்கள் எதிர்ப்பையும் மீறி உருவாக்கப்பட்டது என்பதை அவருக்கு தெளிவாக எடுத்துரைத்ததாகவும் தெரிவித்தார்.



அந்த அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சில விபரங்களுக்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் சுட்டிக்காட்டியதாகவும், அத்துடன் மீண்டும் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை நம்புமாறு தங்கள் மீது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டாம் என அவரிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் நீதிப் பொறிமுறையில் நம்பிக்கையில்லை என்பதையும், சர்வதேச நீதிப் பொறிமுறையே தங்களுக்கு வேண்டும் எனவும் உறுதியாக தூதுவரிடம் விளக்கியதாகவும் அவர் கூறினார்.

இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதாரப் பிரச்சினைகள் மத்தியில் நாட்டு மக்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கின்றார். பொதுவாக, வடக்கு கிழக்கில் வாழும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வைத்து அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினரிடம் அவர் உரையாடியுள்ளார்.

அமெரிக்கா, அமெரிக்காவிற்கு சார்பான நாடுகள் மற்றும் அமைப்புகளிடம் கடன் பெறும் நிலையில் உள்ள கோட்டாபய அரசாங்கம் அந்த நாடுகள், அமைப்புகள் கூறும் நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்கத் தூதுவரின் யாழ்ப்பாண சந்திப்புகள் முக்கியமானவை என்றே கருதலாம்.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நாட்டில் அடுத்து நடக்கப் போவது என்ன?

- விகிர்தன் -

கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரி போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளும் தொடர்கின்றன. தாங்கள் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதில்லை என கோட்டாபய ராஜபக்ஸ தெரிவிக்கின்றார். பொருளாதார நெருக்கடியை சமாளிக்கப் பல நாடுகளிடமும் கடன்கள் பெறப்படுகின்றன. எனினும், மக்களுக்கு எந்தவொரு நிவாரணமும் கிட்டவில்லை. நாளுக்கு நாள் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இலங்கையில் எப்போதுமில்லாதவாறு சவர்க்காரங்களின் விலைகள் தற்போது அதிகூடிய மட்டத்தை எட்டியுள்ளது. இரண்டு மடங்கிற்கு மேல் அதன் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு சன்லைட் சவர்க்காரம் 135 ரூபாவாகவும், பேபி சவர்க்காரம் 175 ரூபாவாகவும், லைப்போய் சவர்க்காரம் 145 ரூபாவாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சவர்க்காரம் வாங்குவதற்காக கடைகளில் மக்கள் முண்டியடிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

உணவுப்பொருட்களின் விலைகள் மேலும் உயர்ந்துகொண்டே செல்கின்றன. பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொதி நிலையை குறைக்க வேண்டுமானால் பொருள்களின் விலைகளை உடனடியாகக் குறைக்க முடியாவிட்டாலும் மேலும் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவுமே நடப்பதில்லை. எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றுவது போன்று மேலும் மேலும் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இது எங்கே போய் முடியப் போகின்றது என்பதுதான் இன்று இலங்கையில் வாழும் மக்களின் விடை தெரியாத கேள்வியாக இருக்கின்றது.

'GOTA GO HOME' போராட்டங்களுக்கு மேலதிகமாக மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவிலிருந்து விலக வேண்டும் என்கின்ற கோசமும் தற்போது மேலோங்கி வருகின்றது. தான் கடைசி வரையில் பதவி விலகப்போவதில்லை என மஹிந்த ராஜபக்ஸ உறுதியாகத் தெரிவிக்கின்றார். தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப் பட்டாலும் அதிலும் தானே பிரதமர் என அவர் ஒற்றைக் காலில் நிற்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்கின்ற கோரிக்கை அரசாங்கத்திற்குள்ளிருந்தே வெளிவரத் தொடங்கியுள்ளது. அரசாங்கத்தின் பங்காளிகளாக இருந்த கட்சிகளும் இதனை வலியுறுத்துகின்றன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவும் புதிய அமைச்சரவையும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என கோட்டாபய அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கு கடிதமொன்றையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.



தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அவரது பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும், நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்குத் தீர்வைக் காணும் வகையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமெனவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ உள்ளிட்ட ராஜபக்ஸ குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. இக் கலந்துரையாடலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ, முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஸ மற்றும் பசில் ராஜபக்ஸ ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்திற்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் முன்னெடுத்து வரும் போராட்டங்கள் தொடர்பிலேயே இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் பதவிகளில் நீடிக்க வேண்டும் என்று கோரி, 'கோட்டா மஹிந்த எங்களுக்கு வேண்டும்' என்ற பதாகைகளுடன் சிறு குழுவினர் ஆங்காங்கே காணப்படுகின்றனர். இவர்கள் பணம் வழங்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட குழுவினர் என்று கூறப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என வலியுறுத்தி ஆளுங் கட்சிக்குள் கையொப்பம் பெறும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது ஒருபுறமிருக்க, தான் தவறான சில தீர்மானங் களை எடுத்ததாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தற்போது ஒப்புக்கொண்டுள்ளார். விவசாயிகளுக்கான இரசாயனப் பசளையை தடைசெய்தமை, சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில் தாமதம் காட்டியமை ஆகிய விடயங்கள் தான் செய்த தவறு என அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.



ஜனாதிபதி கோட்டாபய எடுத்த தவறான முடிவுகள் காரணமாகவே நாட்டிலுள்ள 22 மில்லியன் மக்கள் இன்று துன்பங்களை அனுபவித்து வருவதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போல் புதிய அமைச்சரவையை நியமித்துள்ளதாகவும், இதன்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது எனவும் ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியில் அவர் கூறியுள்ளார். தவறு நடந்துள்ளது என்று ஏற்றுக்கொண்டால், சம்பந்தப்பட்டவர் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர் அரசாங்கத்தை சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்லவிடாது தடுத்தவர் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சேதனப் பசளைத் திட்டத்தை ஐந்து ஆண்டு நீண்ட திட்டத்தின் கீழ் செயற்படுத்த வேண்டும் என யோசனை முன்வைத்த கமத்தொழில் ஆலோசகர்கள், செயலாளர்களை பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கினார். எவருடையே ஆலோசனைகளையும் அவர் பொருட்படுத்தவில்லை. தவறானவர்களின் ஆலோசனைகளையே ஏற்று நடந்தார்.


விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் இரசாயன பசளையை வழங்கியிருந்தால், அவர்கள் வீழ்ச்சியடைந்திருக்கமாட்டார்கள். விவசாயிகளே நாட்டை தன்னிறைவு அடையச் செய்தனர். அதனை ஜனாதிபதி மறந்து போனார். சரியான நேரத்தில் இரசாயன பசளைகள் கிடைத்து பயிர் செய்ய முடிந்திருக்குமாயின் மக்களுக்கு இன்றுள்ள பட்டினி நிலை ஏற்பட்டிருக்காது. விவசாயிகளின் உதவியால் மக்களுக்கு குறைந்த விலையில் அரிசி கிடைத்திருக்கும். இவ்வாறு முன்னாள் அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். அவர் கூறியுள்ள அனைத்தும் உண்மையே.

தேசிய அரசாங்கம் அமைத்தாலும் இன்றுள்ள நிலைமைகளை உடனடியாக மாற்றியமைக்க முடியாது. ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டாலும் கூட பொருளாதார சமூக நிலை உருவாக நீண்ட காலம் செல்லும். இந்த நிலையில்தான் நாட்டு மக்கள் அடுத்து என்ன நடக்கப் போகின்றது எனத் தெரியாமல் தவிப்பு நிலையில் உள்ளனர்.




MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
• Advanced function
• Calculus & vectors
• Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr.S.F.Xavier (Teacher)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 88



- அகணி -
authorakani@gmail.com

ஓஷோவின் தியானம் நூலினை வாசிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த நூலிலுள்ள சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென எண்ணுகிறேன். "என்னைப் பொறுத்தவரையில் தியானமும், சங்கீதமும் ஒரே தன்மையின் இரு வெளிப் பாடுகள். சங்கீதமில்லாத தியானத்தில் முழுமை கிடையாது. அதில் எந்த உயிரோட்டமும் இருக்காது. அவ்வாறே தியானமில்லாத சங்கீதமும் வெறும் சத்தம். வெறும் கேளிக்கை. ஆகவே சங்கீதமும், தியானமும் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். இதனால் இந்த இரண்டுக்குமே ஒரு புதிய பரிமாணம் உண்டாகிறது" என்கிறார் ஓஷோ. ஓஷோ அவர்கள் உள்ளத்தால் வளருவதற்காக, ஒருவரை ஒருவர் புரிந்து அன்பு செலுத்தி வாழ்வதற்கு தியானமே திறவுகோல் என வலியுறுத்தி வருபவர். தியானம் மனிதனின் இயற்கையான தன்மை. எந்த இறந்த கால எண்ணங்களோ, வருங்கால எதிர் பார்ப்புக்களோ இல்லாமல் வாழ்வதுதான் சுதந்திரம். ஒரு கணத்தில் நாம் எதைச் செய்கின்றோமோ அதை மட்டும் ஒழுங்காகச் செய்யுங்கள் என்பது ஓஷோ அவர்களின் அறிவுரை. இவ்வாறு செய்ய முடியாவிட்டால் அதற்கான பயிற்சியை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். மனத்தை குறுக்கிடாமல் வைத்துக் கொண்டு தியானம் செய்ய வேண்டும் என்பது ஓஷோவின் அணுகுமுறை. இது மிகவும் கடினமான விடயம். அதற்குப் போதியளவு பயிற்சி வேண்டும்.

"நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். நீங்கள் வெளிப் பொருட்களை எப்படி கண்கள் மூலமாகப் பார்க்கிறீர்களோ, அதைப்போல, கண்களை மூடிக்கொண்டு, உங்கள் மனத்தில் வந்துபோகும் பல தரப்பட்ட எண்ணங்களை, உங்களை சம்மந்தப்படுத்திக் கொள்ளாமல், பார்க்க வும். அப்பொழுது எவ்வளவோ ஆசைகள், பழைய ஞாபகங்கள், கனவுகள், எதிர் பார்ப்புகள், கோபங்கள், தாபங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வருவதைக் கண்டு, நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவை அனைத்தையும் விமர்சிக்காமல், இது நல்லது, இது கெட்டது, இது புனிதமானது. இது பாபமானது என்று உங்களை சம்மந்தப்படுத்திக் கொள்ளாமல், யாருக்கோ நேருவதாகக் கருதி வெறுமனே கவனித்துப் பாருங்கள்" என்று ஓசோ கூறியுள்ளார்.

"நீங்கள் மனதாலோ, அல்லது உடலாலோ எதையும் செய்யாமல், எல்லா நட வடிக்கைகளும் முடிந்த நிலையில், நீங்கள் வெறுமனே, வெறும் உணர்வாய், சாட்சியாய் இருப்பதுதான் தியானம்" என்று ஓஷோ கூறியுள்ளார். எனவே சில வினாடிகளாவது ஓய்வுத்தன்மையில் இருந்தால் அதுவே தியானமாகிவிடும். தியானத்தின் இரண்டாவது நிலையில் அதிலிருந்து வெளியே வந்து பல காரியங்களைச் செய்யலாம்.

கவனித்தல்தான் தியானம் என்றும் கூறலாம். நீங்கள் ஏதோ ஒன்றைப் பார்க்க வேண்டும். பார்க்கப்படும் பொருள் முக்கிய மில்லை. ஆனால் இதை விழிப்புணர் வோடு செய்ய வேண்டும். நீங்கள் நடக்கிறீர்கள் அல்லது உட்கார்ந்திருக் கிறீர்கள் என்ற பிரக்ஞை உங்களிடம் முழுமையாக இருக்க வேண்டும். தூங்காமல் விழிப்புடன் இருக்க வேண்டும். விழிப்புணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு உடல் அசைவுகளைக் கவனிக்க வேண்டும். கண் இமைப்பதைக் கவனிக்க வேண்டும். மூச்சு வெளியே வெளியே செல்லுவதையும், உள்ளே வருவதையும் கவனிக்கவும்.



உங்கள் உடலிலும், மனத்திலும் ஓர் அமைதித்தன்மை ஏற்படும்பொழுது அவற்றுக்குள் ஒரு முழுமையான தொடர்பு உண்டாகிறது. அதன்பின் முழுமையான விழிப்புணர்வு நிலை. அந்த நிலையில் தான் பேரானந்தம் என்பதை உணர முடியும்.

உண்மையான அமைதியின் தன்மை நீங்கள் இயைந்து ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்தது. உயிர்த்தன்மை நிரம்பியது. அமைதியின் ஒளியை அகக் கண்ணால் மட்டுமே பார்க்க முடியும். பேரமைதிப் பெருங்கடலில் நாம் ஒவ்வொருவரும் மூழ்க வேண்டும். உயிர்த் தன்மையின் மையம் புயலின் மையத்திற்குச் சமமானது. நீங்கள் புயல் போன்று அலைந்து கொண்டிருக் கின்றீர்கள் அதன் மையம் அமைதியாக உள்ளே இயங்குகிறது. உயிர்த்தன்மை உங்களுக்கு கட்டுப்பட்டதல்ல. ஆனால் நீங்கள் அதனால் கட்டுப்படுத்தப்படுகிறீர் கள். தியானம் உங்களை உணர்வு மயமாக்குகிறது. உயிர்த்தன்மையைப் பொறுத்தளவில் நீங்களும் இந்தப் பிரபஞ்சமும் ஒன்றுதான்.

தியானம் ஆழமாகச் செல்ல அன்பின் பரிமாணம் அதிகரிக்கும். நீங்கள் உண்மையான அன்பு செலுத்தினால் தியானத்தன்மைக்கு உங்களை இழுத்துச் செல்லும்.

உங்கள் உண்மையான தன்மையை நீங்கள் உங்கள் உள் உணர்வாகப் புரிந்து கொள்வதற்கான ஓர் ஏற்பாடுதான் தியானம் என்கிறார் ஓஷோ. ஒரு வழி காட்டியுடன் நீங்கள் முறையாகத் தியானம் செய்தால் உங்கள் நேரத்தையும், சக்தியையும் மிச்சப்படுத்தலாம் எனக் கூறப்படுகிறது. ஆரம்பத்தில் தியானங் களை ஒரு முறையாகவே எடுத்துச் செய்து வர நாளடைவில் உங்களுடைய செயல்களில் ஒன்றாகிவிடும். தியானத்தை முதலில் முயற்சியாக ஆரம்பித்துப் படிப் படியாக, அது இயல்பாக உங்கள் முயற்சி இன்றிச் செயல்படும். தியானம் பற்றிய தெளிவான அறிவு இன்றி தியானம் செய்வது ஆபத்தானதெனவும் கூறப்படு கிறது. உலகத்தில் அதிகம் சிக்கலானது மனம்தான்.

தியானம் செய்யும்பொழுது உங்கள் தொலைபேசியை அமைதிப்படுத்தி விடுங்கள். ஒரு நாளில் ஒரு மணி நேரத்தை தியானம் செய்வதற்கு ஒதுக்கினால் போதுமானது. பொருத்தமான இடத்திலிருந்து கொண்டு தியானத்தைச் செய்யவேண்டும்.

உங்களில் ஏற்படும் அதீத கற்பனையால் நோய்கள் வருகின்றன. உங்களுக்கு ஏற்படும் கற்பனைக்கு ஏற்ப மனமும் செயல்படும். தியானத்திற்காக அமரும் பொழுது உங்கள் உடலை வருத்தாது வசதியாக இருக்கவேண்டும்.

தியானம் செய்யும்பொழுது முதல் பத்து நிமிடம் உங்கள் மூச்சுப் பயிற்சியில் கவனம் செலுத்தல் வேண்டும். வெளியே விடும் மூச்சில் மட்டும் கவனம் செலுத்தி உங்கள் மூச்சை மூக்கினால் மட்டும் உள்ளேயும் வெளியேயும் வெகு வேகமாக விடவும். மூச்சுக்காற்று உள்ளே நுழைந்து நுரையீரலை முழுமையாக நிரப்ப வேண்டும். மூச்சை மிக ஆழமாக இழுத்து வேகமாக வெளியே விட வேண்டும். இதனை தொடர்ந்து பத்து நிமிடங்கள் செய்ய வேண்டும்.

அடுத்த பத்து நிமிடம் உங்கள் உடலுக்கு முழு சுதந்திரம் கொடுத்து அது எப்படி அசைய விரும்புகிறதோ அவ்வாறே அனுமதியுங்கள்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அமைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

அடுத்த 10 நிமிடம் இருந்த இடத்தில் மேலும் கீழும் குதிக்க வேண்டும்.

அடுத்த 10 நிமிடம் உறைந்தது போல் இருக்க வேண்டும். அடுத்த 10 நிமிடம் மீண்டும் உடல் அசைவிற்கு இடம் கொடுத்து பாடி, ஆடி மகிழ்ந்து கொள்ளுங்கள்.

தியானத்தில் பல வகை உண்டு. ஓஷோ சொல்லும் ஒருவகைத் தியானம் பற்றிப் பேசிக் கொண்டோம்.

# எமைப்பார்த்து நகைந்துவிடும்!

இலக்கியங்கள் இலக்கணங்கள் எவ்வளவு படித்தாலும்
தலைக்கனங்கள் போகாமல் தடுமாறி நிற்கும்பலர்
இருக்கின்றார் எம்மிடத்தில் எனநினைக்கும் வேளையிலே
இலக்கியமும் இலக்கணமும் எமைப்பார்த்து நகைத்துவிடும்!



பட்டங்கள் பலபெற்றும் பண்புதனைப் பறக்கவிட்டு
துட்டகுணம் மிக்கோராய் தூய்மையற்று நிற்குமவர்
பட்டங்கள் அத்தனையும் வட்டமிட்டு வானில்செல்லும்
காகிதப் பட்டங்களாகவன்றோ கண்ணுக்குத் தெரிகிறது!

பாடுபட்டுப் படிக்கின்றார் பலபதவி வகிக்கின்றார்
கூடுவிட்டுப் பாய்வதுபோல் குணம்மாறி நின்கின்றார்
கேடுகெட்ட செயலாற்றி கிராதகராய் மாறுமவர்
பாடுபட்டுப் படித்ததெல்லாம் பயனற்றே போகிறதே!

படிப்பறியார் பலபேர்கள் பண்புணர்ந்து வாழ்கின்றார்
பட்டம்பெற்ற படித்தவர்க்கோ பண்புபற்றிக் கவலையில்லை
மனம்போன போக்கிலவர் வாழவெண்ணி நிற்பதனால்
நயமான கல்வியினை நாசம்பண்ணி நிற்கின்றார்!

கீதையொடு குறள்படித்தும் பாதை தடுமாறுகின்றார்
போதையிலே நாளுமவர் புரண்டுமே உழலுகின்றார்
காதிலெவர் சொன்னாலும் கவனமதில் கொள்ளாமல்
மோதியே மிதிப்பதையே முழுமையாய் நம்புகின்றார்!



கற்றதனால் பயனென்ன எனக்கேட்ட வள்ளுவனார்
கண்திறந்து பார்த்தவர்க்கு கருத்துரைக்க வந்ததாலும்
கற்றகல்வி பட்டங்கள் காற்றிலவர் பறக்கவிட்டு
காசையே அணைத்தபடி கண்ணியத்தை பாரார்கள்!

எம். ஜெயராமசர்மா

## கனடியப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பெறும். இதனால் எத்தனை பேர் இந்தத் தலைவர் தெரிவில் வாக்களித்தாலும் பழமைவாதக் கட்சித் தலைவர் தெரிவிற்கு போடப்பட்ட மொத்த வாக்குகள் 33,800 புள்ளிகள் ஆகும். இதில் குறைந்தது 16,901 புள்ளிகள் பெற்றவரே கட்சித் தலைவராக அறிவிக்கப்படுவார்.

இக்கட்சித்தலைவர் தெரிவிற்கு வாக்களிப் போர் தங்கள் தெரிவாக 1,2,3, .... எனத் தலைவர் பதவிக்குப் போட்டியிடும் வேட் பாளர்கள் எல்லோருக்கும் வாக்களிக்கலாம். முதலில் அவர்களது முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளருக்கு அவர்களது வாக்கு அளிக்கப்பட்டு எண்ணப்படும்.

வேட்பாளர்கள் எவரும் 16,901 புள்ளிகள் பெறாவிட்டால் மிகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகள், அவற்றில் உள்ள 2ஆவது ஆகத் தெரிவு செய்யப்பட்டவருக்கு இடப்பட்டு மீண்டும் எண்ணப்படும்.

இவ்வாறே ஒரு வேட்பாளர் குறைந்த 16,901 புள்ளிகள் பெறப்படும் மட்டும் மிகவும் குறைந்த புள்ளிகள் பெற்ற வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகள் அவற்றில் உள்ள அடுத்த தெரிவு செய்யப்பட்டவருக்கு இடப்பட்டு மீள எண்ணப்படும்.

இறுதியில் 16,901 புள்ளிகள் அல்லது அதற்கு மேற் பெறப்பட்டவரே கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவராக அறிவிக்கப்படுவார்.

2022 ஏப்பிரல் 19ஆம் திகதிவரை வேட்பாளர் படிவங்களை நிரப்பி சமர்ப் பித்தவர்களாக எண்மர் உள்ளனர். அவர்களில் முன்னணியில் நிற்கும் ஐவரின் விபரங்கள்.


Pierre Poilievre

**Pierre Poilievre :** 1979 யூன் 3இல் பிறந்த Pierre, கல்ஹரியில் தனது இளமைக்காலத்தில் வாழ்ந்தார். கல்ஹரி பல்கலைக்கழகத்தின் இளங்கலைமானிப் பட்டதாரியான Pierre, 2004ஆம் ஆண்டில் இருந்தே ஒட்டாவாவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு வருகிறார். இவருக்கு Anaida என்ற துணைவியாரும், இரண்டு பிள்ளைகளும் இருக்கின்றனர்.

Pierreதான் முதன்முதலில் பழமைவாதக் கட்சித்தலைமைப் பதவிக்குப் போட்டியிடப் போவதாகத் தெரிவித்தவர். இவரது முக்கிய கொள்கையாக லிபரல் அரசு விதித்த காபன் வரியை இரத்துச்செய்வது இருக்கிறது. இவருக்கு 51 பழமைவாதக் கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தமது ஆதரவைத் தெரிவித் துள்ளனர். இதுவரை நடைபெற்ற ஊட கங்களின் கருத்துக் கணிப்பில் பழமை வாதக் கட்சி உறுப்பினரின் 32%ஆன வாக்குகளைப் பெற்று ஏனைய வேட்பாளர் களை விட முன்னணியில் நிற்கிறார்.


Jean Charest

**Jean Charest:** 1958 யூன் 24இல் Sherbrooke, குவிபெக்கில் பிறந்த Jean Charest, Sherbrooke பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். இவர் Brian Mulroneyயைப் பிரதமராகக் கொண்ட நாடாளுமன்றத்தில் அமைச்சர் பதவி வகித்தவர். 28 வயதில் அமைச்சராகிக் கனடியச் சரித்திரத்தில் அமைச்சர் பதவி வகித்த மிக இளையவர் என்ற சாதனையைப் பெற்றவர்.

1995ஆம் ஆண்டில் இருந்து 1997ஆம் ஆண்டுவரை கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவராக Jean Charest இருந்தார். Jeanதான் பழமைவாதக் கட்சியின் முதலாவது பிரஞ்ச் இனத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர். அதன்பின்னர் 1998இல் குவிபெக் மாகாண லிபரல் கட்சியின் தலைவராகப் பதவி ஏற்றார். குவிபெக் மாகாண முதல்வராக மூன்று முறை தெரிவு செய்யப்பட்டு 2003இல் இருந்து 2012ஆம் ஆண்டுவரை முதல்வராக இருந்தார். Jean Charest இற்கு Michele Dionne என்ற துணைவி யாரும் மூன்று பிள்ளைகளும் இருக் கின்றனர். தனது பல வருட அரசியல் அனுபவத்தைக் கட்சி தலைவருக்குரிய தேர்தல் பிரச்சாரமாகக் கூறி வாக்காளரி டம் ஆதரவை Jean கேட்டு வருகிறார். இவருக்கு 12 பழமைவாதக் கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இதுவரை நடைபெற்ற ஊடகங்களின் கருத்துக்கணிப்பில் பழமைவாதக் கட்சி உறுப்பினரின் 14%ஆன வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் நிற்கிறார்.


Patrick Brown

**Patrick Brown:** 1978 மே 26இல் ரொறொன்ரோவில் பிறந்த Patric Brown, ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையிலும், வின்சர் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையிலும் பட்டங்கள் பெற்றவர். இவர் 2006ஆம் ஆண்டில் இருந்து 2015ஆம் ஆண்டுவரை கனயடி நாடாளுமன்ற உறுப்பினராக Barrie தொகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்தி வந்தார். 2015ஆம் ஆண்டில் இருந்து 2018ஆம் ஆண்டுவரை ஒன்ராறியோ மாகாணப் பழமைவாதக் கட்சியின் தலைமைப்பதவியை வகித்தார். பின்னர் 2018ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை பிறம்ரன் நகர முதல்வராகப் பதவி வகித்து வருகிறார். Patrick Brownஇற்கு Genevieve Gualtieri என்ற துணைவியாரும், இரண்டு பிள்ளை களும் இருக்கின்றனர். கனடாவின் பல் கலாசார சமூகங்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவேன் என்று கூறி வாக்காளரிடம் ஆதரவைக் கேட்டு வருகிறார். இவர் தான் பிரதமராக வந்தால் LTTE இயக்கத்தைத் தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குவதாகவும், தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிக்குக் கனடிய நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோருவதாகவும் கூறியுள்ளார்.

இவருக்கு 4 பழமைவாதக் கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இதுவரை நடைபெற்ற ஊடகங்களின் கருத்துக் கணிப்பில் பழமைவாதக் கட்சி உறுப்பினரின் 4%ஆன வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தில் நிற்கிறார்.

**Leslyn Lewis:** 1970 டிசம்பர் 2இல் Jamaicaஇல் பிறந்து ஐந்து வயதில் கனடாவிற்குக் குடிபெயர்ந்து East York, ஒன்ராறியோவில் வாழ்ந்து வந்தார். ரொறொன்ரோ பல்கலைக்கழக இளங் கலைமானிப் பட்டதாரியான Leslyn, யோர்க் பல்கலைக்கழகத்தில் சுற்றுப்புறச் சூழலியலில் முதுமானிப் பட்டம் பெற்றவர். Osgoode Hall சட்டவியல் கல்லூரியில் சட்டவியல் பட்டம் பெற்றுப் பின்னர் சர்வதேச சட்டவியலில் முனைவர் பட்டமும் பெற்றவர். 2021இல் இருந்து தான்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# பல பரிமாணங்கள் உடைய ஒரு தலைவர் பெரியார்

## நேர்காணல்: எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி நேர்கண்டவர்: கண்ணன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

**விளம்பரம்:** தமிழ்நாட்டில் கடந்த 55 ஆண்டுகளாக திராவிடக் கட்சிகளே ஆட்சி செய்கின்றன. இந்த 55 ஆண்டுகள் குறித்த உங்கள் மதிப்பீடு என்ன?

தமிழ்நாட்டில் பிராமணரல்லாதார் இயக்கமாக இருந்த ஜஸ்ரிஸ் கட்சியின் (Justice Party) காலகட்டத்திலிருந்து நாம் தொடங்கலாம். அக்காலத்தில் மூன்று சதவிகிதம் இருந்த பிராமணர்கள் ஆங்கிலேயே ஆட்சியில் தொண்ணூறு சதவிகிதம் பதவிகளை வகித்து வந்தனர். இதன் காரணமாகத்தான் பிராமணரல்லாதார் இயக்கமாக ஜஸ்ரிஸ் கட்சி உருவானது. ராமசாமி முதலியார், பன்னீர்செல்வம், தியாகராஜ செட்டியார் போன்ற ஜஸ்ரிஸ் கட்சித் தலைவர்கள் படித்தவர்கள்.

படித்த பிராமணரல்லாதோருக்கும் அரசுப் பதவிகளில் இடம் வேண்டும் என்பதுதான் அவர்களது கோரிக்கை. மற்றபடி அவர்களுக்கென்று பெரிய கொள்கையெல்லாம் கிடையாது. அவர்களும் தலித்துகளை வீட்டுக்குள் அனுமதிக்க மாட்டார்கள். ‘முதன்முதலில் பெரியார்தான் பிராமணரல்லாதார் இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார். திராவிடர் கழகம் உருவானது.

பல பரிமாணங்கள் உடைய ஒரு தலைவர் பெரியார். அவருக்குப் பதவி ஆசை இல்லை. எனவே, ஒரு சமூக சீர்திருத்த இயக்கமாகத்தான் திராவிடர் கழகத்தை பெரியார் நடத்தினார். அந்த அளவில் தமிழ் நாட்டில் அவர் நிகழ்த்தியிருக்கும் மாற்றங்கள் மிகவும் முக்கியமானவை: வரவேற்கத்தக்கவை: சுயமரியாதை இயக்கம் என்று அவர் வெறுமனே சொல்லிக் கொண்டு போகவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு அந்த உணர்வு ஏற்படவும் காரணமாக இருந்தார்.



மொழியைப் பொறுத்தவரை அக்காலத்தில் பொதுமொழி என்பது பிராமணர்களின் மொழியாகத்தான் இருந்தது. பத்திரிகைகளிலும் அப்படியே. திராவிடர் இயக்கத்தினர் வந்த பிறகுதான் மொழி எளிமைப் படுத்தப்பட்டு, மக்களிடையே பேச்சு வழக்கத்திலிருந்த மொழிக்கு முக்கியத்துவம் உருவானது. கூடவே, படிக்கும் பழக்கம் பெருமளவு பரவலாகி கிராமங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டது. திராவிடர் கழகத்தினர் ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படுத்திய வாசக சாலைகளுக்கும் ‘தினத்தந்தி’ நாளிதழுக்கும் இதில் பெரும்பங்கு உண்டு.

மேல்தட்டு மக்களுக்கு மட்டும் என்றிருந்த கல்வித்துறையில் அடித்தட்டு மக்கள் வரை கல்வி சென்றடையக் காரணமாக இருந்தோர் திராவிடர் கழகத்தினரும் அவர்கள் வழி வந்தவர்களும்தான். இந்தியாவில் உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற ஹிந்தி பேசும் மாநிலங்களுடன் ஒப்பிடும் போது கல்வித் துறையில் தமிழ்நாடு பெருமளவு உயர்ந்திருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது.

கல்வி பரவலானதன் தொடர்ச்சியாக கழகத்தினரால் நடைபெற்ற சமூக சீர்த்திருத்தங்களை அநேகம் சொல்லலாம். ஆனால், இவை எல்லாவற்றுக்குமான பெருமை போய்ச் சேர வேண்டியது பெரியாருக்கு மட்டும்தான்.

பெரியார் திருமணம் செய்து கொண்டதும் அதையே காரணம் காட்டி தி.மு.கவைத் தொடங்கினார் அண்ணா. திருமணம் ஒரு காரணம்தான், உண்மையான காரணம் பெரியாருக்குப் பிறகு அதிகாரம் அந்த அம்மாவுக்குப் போய்விடும் என்று பயம்தான். இது அதிகாரப் போட்டி உள்ள எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய ஒன்றுதான் என்றாலும், தமிழகத்தின் சீரழிவுக்கு அன்று தொடங்கிய இந்த அதிகாரப் போட்டிதான் காரணமாகிவிட்டது. காந்தியிடம் இருந்து பிரிந்து வந்த காங்கிரஸுக்கு நேர்ந்த கதைதான் பெரியாரிடம் இருந்த பிரிந்த வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் நடந்தது. ஆனால், இதில் முன்னதைவிட பின்னதின் சீரழிவுதான் படுமோசமானது.

தேர்தல் அரசியல் என்று தொடங்கிய போது கூடவே அனைத்து வகை அயோக்கியத்தனங்களும் வந்தன. திமுக என்ற ஒன்று தொடங்கப்படாமல் இருந்திருந்தால் தமிழ்நாடு இந்த அளவுக்குச் சீர்கெட்டிருக்காது என்று என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். ஒருவேளை பாரதிதாசன் சொன்னதுபோல் அனைவரும் ‘ஒப்பப்பர் ஆகியிருக்கவும் கூடும்.

**விளம்பரம்:** ஆனால், தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் வெல்ல முடியாத வலிமையை மக்களிடம் பெற்றிருக்கின்றன. இதற்கு என்ன காரணம்?

எந்த ஓர் இயக்கமும் வலுப்பெற முதலில் அதற்குப் பலமான ஓர் எதிரி வேண்டும். பிராமணியம் முடித்த பிறகு ஓர் எதிரியை உருவாக்க வேண்டிய தேவை வந்தபோது, தன்னுடைய முட்டாள்தனத்தால் லட்டு மாதிரி மொழிப் பிரச்னையை திமுகவினருக்குக் கொடுத்தார், சாஸ்திரி. நமது மொழிக்கு ஏற்படுத்தப்படும் அவமானம் என்பது நமக்கு இழைக்கப்பட்ட அவமானம் போல்தான். இந்த உண்மையை திமுககாரர்கள் பயன்படுத்தினர்.

ஆனால், மொழிப் பிரச்சனையால் அகில இந்திய அளவில் தமிழ்நாடு தனிமைப் படுத்தப்பட்டது. தேசிய நீரோட்டத்திலிருந்து அன்னியப்பட்டு விட்டோம். கேரளா தங்களது அடையாளத்தை தொலைக்காமல் தேசிய நீரோட்டத்திலும் இருக்கிறது. நாங்கள் எங்கள் அடையாளத்தையும் தொலைத்தோம், தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகினோம். கேரளாவில் ஹிந்தி படித்ததால் மலையாள மொழிக்கு என்ன இழப்பு ஏற்பட்டுவிட்டது அல்லது ஹிந்தி படிக்கமாட்டோம் என்று சொன்னதால்தான் தமிழ் மொழிக்கு என்ன உயர்வு வந்துவிட்டது. சன் ரிவியில் இன்று உபயோகப்படுத்தப்படும் தமிழ், எந்த அளவுக்குத் தமிழ் சீரழிந்திருக்கிறது என்பதற்கு உதாரணம். இத்தனைக்கும் தமிழ்ப் பெயரைச் சொல்லி ஆட்சிக்கு வந்த தலைவரின் குடும்பச் சொத்து அது!

**விளம்பரம்:** திரைப்படங்கள் ஆரம்ப காலத்தில் கீழ்த்தட்டு மக்களின் ரசனைக்குரிய ஒன்றாக ஒதுக்கப்பட்டு மேல்தட்டு மக்களால் ஒதுக்கப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திரைப் படத்தைக் கையிலெடுத்துக் கொண்டனர். அதுவும் அவர்கள் வெற்றிக்குக் காரணம் என சொல்லப்படுகிறதே?

உண்மைதான். அது அவர்களுக்கு மிகவும் சரியாகப் பயன்படவும் செய்தது. புராணப் படங்கள்தான் அந்தக் காலத்தில் அதிகம் எடுக்கப்பட்டு வந்தன். ‘சபாபதி’ போல் விதிவிலக்குகள் மிகவும் குறைவுதான். திமுககாரர்களின் திரைப்படங்களில் சமூகப் பிரச்னைகளும் சமூக சீர்த் திருத்தங்களும்தான் மையமாக இருந்தன. அண்ணாவின் ‘ஓர் இரவு’, ‘வேலைக்காரி’ போன்றவை உதாரணம். ஆனால், துரதிருஷ்டவசமாக சினிமாவையும் அரசியலையும் அவர்கள் தனித்தனியாகப் பார்க்காமல் ஒன்றாக்கிவிட்டனர். சினிமாவிலிருந்து வந்தவர்களால் திமுக சீரழிந்தது என்றால் அதிலிருந்து பிரிந்து உருவான அதிமுகவுக்கு சினிமா கட்சி என்பதைக் கடந்து எந்த முகமும் கிடையாது. பொருளாதாரத்தைப் பற்றி திட்டவட்டமான தெளிவு கிடையாது. அதை ஓர் அரசியல் கட்சியாகவே பொருட்படுத்த முடியாது. எம்.ஜி.ஆருக்கும் கருணாநிதிக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக உருவான கட்சி என்பதைத் தவிர, அதற்கு வேறு எந்த முக்கியத்துவமும் கிடையாது.

ஆடம்பரம், பகட்டு, ஆரவாரம், பிரமாண்டம் என்று சினிமாவிருந்து மொத்தத்தையும் திராவிட இயக்கத்தினர் அரசியலுக்குக் கொண்டு வந்தனர். இது அவர்களுடன் நிற்காமல் மொத்த தமிழ் நாட்டுக் கலாசாரத்தையும் சீரழித்துவிட்டது. அக்காலங்களில் காங்கிரஸ்காரர்கள் கூட்டம் நடத்தினால் ஒரு சிறு பந்தல், மைக் அவர்களுக்குப் போதும். ஆனால், திமுககாரர்கள் சினிமா செட் மாதிரி மேடை போட்டனர். மக்கள் சினிமா செட் மேடையை நோக்கித்தான் போனார்கள். ஆவடி காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது,

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

## அப்பா அம்மா பாதங்களில்

நீதி நேர்மை கருணையைப் புகட்டிவிட்டவர்
என்னை உலகுக்கு ஈன்ற என் அன்னை

பொறுமை மன்னிப்பு பணிவு உழைப்பைக்
கற்றுத்தந்தவர் பலசாலியான என் தந்தை

இருவரும் சேர்ந்து இயன்றளவு
கொடைப்பண்பு விதையையும்
என் சிந்தனைத் தோட்டத்தில்
உரமிட்டு விதைத்துச் சென்றுவிட்டனர்

இவற்றைவிடவும் வேறு என்ன
பெரிய சொத்து வேண்டும் எனக்கு
இவ்வுலகில்?

எனது எழுதுகோலில் தினமும்
ஊறிக்கொண்டிருக்கும்
‘மை’
அவர்கள் இருவரின் வற்றாத
வியர்வை ஊற்று என்பதுதான் யதார்த்தம்

அதன் விளைச்சல்
இந்தப் பிரபஞ்சத்தின் வாழ்வுக்காக
நான் கொடுக்கும் உழைப்பு
எனும் கருத்து இதயத்திலிருந்து



உலக பெற்றோர் தினம் ஜூன் 01, 2021



முத்துராஜா

# பல...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

"நாமும் அவர்கள் மாதிரி மேடை போடுவோம்பா" என்று காமராஜர் சொன்னாராம், அந்த அளவுக்கு மக்கள் திமுககாரர்களின் கவர்ச்சியால் ஈர்க்கப் பட்டிருந்தனர். தேர்தல்தான் மையம் என்று ஆனதும் பெரியாரின் பாதையிலிருந்து திமுககாரர்கள் விலகி வந்தனர்.



**விளம்பரம்:** தமிழ் மொழியின் வளர்ச்சியில் திராவிட இயக்கத்தினர் பங்கு என்று பாராட்டும்படி எதுவும் இல்லையா?

மொழி எளிமையாகி மக்களின் பேச்சு வழக்குக்கு முக்கியத்துவம் உருவாகப் பெரியார் காரணமாக இருந்தார் என்றால் அவருக்குப் பிறகு இவர்கள், இவர்களால் முடிந்த மட்டும் மொழியைச் சிதைத்தனர். எளிமைபோல் உயர்வு நவிற்சியே மொழி நடை என்று ஆனது. மொழியை அலங்காரமாகப் பயன்படுத்தினர். 'கும்பி எரிகிறது குடல் கருகுகிறது. குளுகுளு வாசம் ஒரு கேடா" என்று அடுக்குமொழியாகப் பேசினர். மாணவர்கள் இந்த அடுக்கு மொழி வசனத்தால் ஈர்க்கப்பட்டனர்.

நான் ஏழாம் வகுப்புப் படிக்கும்போது 'நொண்டிச் சக்கரவர்த்தி' என்று ஒரு காங்கிரஸ் தியாகி இருந்தார். பல இடங்களில் மேடை போட்டு அடிக்கடி அவர் பேசுவார். "ஏய் ஹிட்லர் மரியாதையாகக் கேட்கிறேன், உன் படைகளை வாபஸ் வாங்கிக்கொள். இல்லையென்றால் உன்னைக் காலி செய்துவிடுவேன். தைரியமிருந்தால் என் முன்னால் வந்து நில்லுடா பார்ப்போம்" என்று கும்பகோணம் காந்தி பார்க்கில் நின்று பேசுவார். 'அணுகுண்டு அப்பாவு' என்று இன்னொருவர் அந்தக் காலத்தில் காங்கிரஸ் பேச்சாளராக இருந்தார். அவர்கள் இரண்டு பேரையும்தான் மேடை நாகரிகம் தெரியாதவர்கள் என்று சொல்வர். அவர்கள் பேச்சின் அதிகபட்ச ஆபாசம் என்பது இந்த 'வாடா, போடா'தான். அவர்கள், இன்று திமுககாரர்கள் மேடையில் பேசுவதைக் கேட்க நேர்ந்தால் முகம் சுழித்து விடுவர். மேடை நாகரிகம் அந்த அளவுக்குச் சீரழிந்து விட்டது.

மேடையில் நடத்தியவற்றைப் பின்பு சட்டசபைக்குள்ளேயே ஜெயலலிதா கொண்டு சென்று விட்டார். இந்த மேடைக் கலாசாரம் எந்த அளவுக்குப் பாதிப்பை நிகழ்த்தி இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம், சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒரு செமினாரில் கூட்டத்திலேயே 'புத்தகத்தின் மீது மூத்திரம் பெய்வேன்' என்று பேச்சாளர் அறிவித்தார்.

கட்-அவுட் கலாசாரத்தை இந்தியாவுக்கு அளித்த பெருமையும், திராவிட இயக்கத் தினரைத்தான் சேரும். திமுககாரர்களால் தான் தலைவரை வழிபடுகிற உணர்வு உருவானது. தலைவருக்காகத் தொண்டர்கள் தீக்குளித்தனர். ராஜிவ்காந்தி இறந்த போது தமிழகத்தில் மட்டும்தான் ஒருவர் தீக்குளித்தார். இதன்மூலமாக பழங்கால காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கைக்குத் திரும்பவும் தமிழகத்தை அழைத்துக் கொண்டு போனவர்கள் என்றும் சொல்லலாம்.

சினிமா உலகத்துக்குள் சுயமரியாதை என்ற வார்த்தைக்கு எந்த அர்த்தமும் கிடையாது. அங்கிருந்து இவர்கள் வந்ததால்தான் அரசியலிலும் அது தொடர்ந்தது. தலைவர் முன்னால் உட்காரக் கூடாது. தலைவரின் பேச்சுக்கு மறுபேச்சு கிடையாது. விவாதம் கிடையாது. எந்த சுயமரியாதை உணர்வைத் தமிழக மக்களுக்குப் பெரியார் தந்தாரோ, அதே சுயமரியாதை மக்கி மழுங்கிப்போக அவரது சீடர்களே காரணமாக இருந்தனர் என்பது எவ்வளவு துரதிருஷ்டமானது.

**விளம்பரம்:** மற்றைய கட்சிகள் பற்றிய உங்கள் மதிப்பீடு?

கம்யூனிஸ்ட்காரர்கள் மேல் சுத்தமாக நம்பிக்கை போய்விட்டது. காங்கிரஸ்காரர்கள் போல் அவர்களும் தேர்தலுக்குத் தேர்தல் திமுக, அதிமுக என்று மாறி மாறிக் கூட்டணி வைத்து, அவர்கள் ஜெயிக்கக் காரணமாக இருக்கின்றனர்கள். இத்தனைக்கும் 1952-ல் பெரிய ஒரு எதிர்க்கட்சியாக இருந்த கட்சி அது. தஞ்சாவூர் ஜில்லாவில் கம்யூனிஸ்ட்டுகள் தவிர, வேறு யாருமே அப்போது கிடையாது. இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

ப. சிதம்பரம் மீது மட்டும் நம்பிக்கை வைக்கலாம் என்று தோன்றுகிறது. எம்.ஜி.ஆர். காலமானபோது டில்லியில் சிதம்பரத்தைச் சந்தித்து, "இது உங்களுக்கு சரியான ஒரு வாய்ப்பு. பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். அவர் அப்போது மத்திய அரசியலில் இருந்து மாநில அரசியலுக்கு வரத் தயங்கினார். ஆனால், மூப்பனார் சரியான ஒரு முடிவு எடுத்து காங்கிரஸ், அந்தத் தேர்தலை தனியாக சந்தித்தனர். 49 சீட்டுகள் ஜெயித்தனர். அதை அப்படியே தொடர்ந்திருந்தால் பெரும் மாற்றத்தை உருவாக்கியிருக்க முடியும். ஆனால், அடுத்த தேர்தலிலேயே வாழப்பாடி ராமமூர்த்தியால் அதிமுகவுடன் கூட்டணி சேர்ந்தது ஜெயலலிதா ஜெயிக்கக் காரணமானது காங்கிரஸ்.

- முற்றும் -

அன்பு,
சிலருக்கு காட்டத் தெரியவில்லை...
சிலருக்கு காட்டுவது தெரிவதில்லை...
பலருக்கு காட்டுவது புரிவதே இல்லை..!

# கனடியப்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி



Leslyn Lewis

வாழ்ந்துவரும் Haldimand - Norfolk, ஒன்ராறியோ தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். 2020இல் நடைபெற்ற கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றார். இவருக்கு 7 பழமைவாதக் கட்சியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இதுவரை நடைபெற்ற ஊடகங்களின் கருத்துக் கணிப்பில் பழமைவாதக் கட்சி உறுப்பினரின் 3%ஆன வாக்குகளைப் பெற்று நான்காவது இடத்தில் நிற்கிறார்.

Leona Allesler: 1968 மார்ச் 16இல் பிறந்த இவர் கனடிய விமானப்படையில் சேவையாற்றியுள்ளார். Royal Military Collegeஇல் இளங்கலைமானி பட்டம் பெற்றுள்ளார். 2014ஆம் ஆண்டில் இருந்து லிபரல் கட்சியின் உறுப்பினராக இருந்த Leona, 2015இல் நடைபெற்ற கனடிய நாடாளுமன்றத் தேர்தலில் லிபரல்



Leona Alleslev

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். லிபரல் கட்சியின் பொருளாதாரக் கொள்கையில் முரண்பாடு ஏற்பட்டதால் 2019இல் பழமைவாதக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். 2019இல் நடைபெற்ற நாடாளுமன்றத்தில் பழமைவாதக் கட்சியின் சார்பில் Aurora - Oak Ridges - Richmond Hill, ஒன்ராறியோ தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். இவர் 2021இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறவில்லை. இவருக்கு Edward Krofchak என்ற துணைவர் இருக்கிறார். இதுவரை நடைபெற்ற ஊடகங்களின் கருத்துக் கணிப்பில் பழமைவாதக் கட்சி உறுப்பினரின் 2%ஆன வாக்குகளைப் பெற்று ஐந்தாவது இடத்தில் நிற்கிறார்.

# இன்னல்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒருநாளில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என்பது நடக்க முடியாத சம்பவம். ஆனால் மெதுவாக மெதுவாக பயிற்சி கொடுக்கும் பொழுது காட்டுக் குதிரைகள் கூட கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுகின்றன. அதுபோலவே நாமும் சிறு வயதிலிருந்து செய்துவரும் பழக்க வழக்கங்களில் சில மாற்றங்களை செய்யும்பொழுது அவை நமது வாழ்வில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. இப்பொழுது நாங்கள் நமது வாழ்வில் நாம் செய்யும் விஷயங்களில் எவை நமக்கு ஆனந்தத்தையும் அமைதியை யும் கொண்டு வருகின்றன என்பதையும், எந்த விடயங்கள் நமது அமைதியை குலைத்து ஆனந்தத்தையும் திருடுகின்றன, என்பதனையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இப்பொழுதும் எவையெல்லாம் நமது நிம்மதியை குறைக்கின்றனவோ அந்தப் பழக்கவழக்கங்களை மெதுவாகக் குறைக்க வேண்டியது நமது தலையாய கடமை ஆகிறது. நமக்கு தரப்பட்ட இந்த வாழ்விலே நன்மையும் தீமையும் நாமே அனுபவிக்க வேண்டி உள்ளது. நமக்கு பசி ஏற்படும் பொழுது அதனை வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாது. நமது உடலில் நோய் ஏற்படும்போது மற்றவர்களால் ஆறுதல் சொல்லலாமேயன்றி அந்த வேதனையை நாங்கள்தான் அனுபவிக்க வேண்டும். அதுமட்டும் அன்றி பெற்றோர் பிள்ளைகள் குடும்பம் என இப்பொழுது பலர் நம்மை சுற்றி இருந்தாலும் நமது இறுதி மூச்சுவரை நம்முடன் இருக்கப்போவது நாங்கள் மட்டுமே. நமது நம்பிக்கைகள் எதுவாக இருந்தாலும் வாழ்க்கையில் இந்த உண்மைகள் ஒருபோதும் மாறுவதில்லை.

பிரேம் ராவத்தின் உரைகளை தழுவியது.



# பீஸ்ட் திரை விமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

பிகில் படத்திற்குப் பின்னர் திரையரங்குகளில் வெளியிடப்பட்ட விஜய்யின் படம் பீஸ்ட் (Beast) ஆகும். இப்படத்தில் விஜய் வீர இராகவன் என்ற இந்திய RAW முகவராக நடித்துள்ளார். காஷ்மீரில் அவர் இந்தியாவிற்காக உளவு வேலை செய்யும்போது நிகழும் ஒரு விபத்தினால் ஏமாற்றமடைந்து தனது வேலையிலிருந்து விலகுகிறார்.

ஒரு வருடத்திற்குப் பின்னர் பிரீத்தி என்ற பெண்ணை வீரா சந்திக்கிறார். அவரது நிலையை அறிந்துகொள்ளும் பிரீத்தி தான் வேலை செய்யும் காவல் நிறுவனத்தில் ஒரு வேலையை வாங்கிக் கொடுக்கிறார். இவ்வாறு வீரா காவலாளியாக வேலை செய்யப்போகும் ஒரு வணிக வளாகம் திடீரென்று தீவிரவாதிகளால் தாக்கப்படுகிறது. வீரா, பிரீத்தி உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் தீவிர வாதிகளின் கட்டுப்பாட்டினுள் அகப்படுகின்றனர்.

முன்னாள் RAW முகவரான வீரா மக்களைத் தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்றுவாரா? இல்லாவிட்டால் வீரா ஒரு வருடத்திற்கு முன்னர் பிடித்த தீவிர வாதியை விடுவிப்பதால் தான் அரசாங்கம் அவர்களைக் காப்பாற்றுமா? என்பதைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.



நீண்ட காலத்திற்குப் பிறகு விஜய் ஒரு சமூகக் கருத்து இல்லாத படத்தில் நடித்துள்ளார். பீஸ்ட் அதிரடியும், நகைச் சுவையும் கலந்த ஒரு பொழுது போக்குப் படம். இது நயன்தாராவின் 'கோலமாவு கோகிலா' மற்றும் சிவகார்த்திகேயனின் 'டாக்டர்' படங்களை இயக்கிய இயக்குநர் நெல்சனின் மூன்றாவது படமாகும். அப்படங்களைப் போலவே முக்கியமான காட்சிகளில் கதாபாத்திரங்கள் நகைச் சுவையாகச் செயல்படுகின்றனர். வீராவும் அப்படங்களின் கதாநாயகர்களைப் போல அமைதியான முகபாவனையுடன் தீவிர மான, முக்கியமான காட்சிகளில் செயல் படுகிறார். மற்றைய கதாபாத்திரங்கள் நகைச்சுவையாக நடப்பது, பொதுவாக விஜய்யின் அமைதியான நகைச்சுவை வசனங்களுக்குப் பொருந்துகிறது. ஆனால், இப்படத்தின் வில்லன் கோமாளித்தனமாக நடப்பது வீராவின் அதிரடிக் காட்சி களுக்குப் பொருந்தவில்லை. பிற படங்களில் பயங்கரமான வில்லன்களை அமைத்த இயக்குநர் பீஸ்ட் படத்திலும் அவ்வாறு செய்திருந்தால் படம் விறுவிறுப் பாகவும், நன்றாகவும், அமைந்திருக்கும்.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரப்படத்தில் சில தேவையில்லாத காட்சிகளும் இருந்தன. அவற்றை குறைத்திருந்தால் நெடுநேரம் ஒரே இடத்தில் (வணிக வளாகம்) நடக்கும் இக்கதை இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

படத்தில் இரு பாடல் காட்சிகள் வந்தாலும் அவை கதையைக் குழப்பாமல் சரியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. விஜய்யின் நடனத் திறமையை நீண்ட காலத்திற்குப் பிறகு இதில் காணக்கூடியதாக இருக்கிறது.

கதாநாயகி பிரீத்தி (பூஜா ஹெக்டே) வீராவுடன் பழகும் காட்சிகள் நன்றாக இருந்தன. ஆனால், அவரது பங்கு பிறகு குறைவாக இருக்கிறது.

பீஸ்ட் படத்தில் ஒரு முக்கிய செய்தி வீரா RAWஇல் இருக்கும்போது அவருடன் பணியாற்றுபவர்களால் கூறும் ஏமாற்ற மாகும். நகைச்சுவையான படத்திலும் இவ்வாறு போரில் நிகழும் பிரச்சனை களைக் காட்டியது வித்தியாசமாக இருந்தது. அத்தோடு இந்த நிகழ்வு எவ்வாறு வீராவின் மனதைப் பாதித்திருக்கிறது என்றும் காட்டியது நன்றாக இருந்தது.

விஜய்யை மீண்டும் ஒரு முற்று முழுதான பொழுதுபோக்குப் படத்தில் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.

# நவீன மகாபாரதம்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

ஒருநாள் வசிட்ட மாமுனிவர் பாஞ்சாலம் நாட்டிற்கு சென்றபொழுது அந்த நாட்டின் மன்னன் தனது மகளான திரௌபதியை அவரிடம் சென்று ஆசி பெற்று வருமாறு அனுப்பினார். அவளும் சென்று வசிட்ட மாமுனிவரை வணங்கி தனது எதிர்காலம் பற்றி அவரிடம் கேட்டாள் அதற்கு வசிட்டரும் எதிர்காலத்திலே இரத்த ஆறு ஓடுவதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்கும் பல்லாயிரக் கணக்கான பெண்கள் விதவைகளாவ தற்கும் நீயே காரணமாக இருப்பாய் என்று கூறினார். அதனைக் கேட்டதும் திரௌபதிக்கு மிகவும் கவலை உண்டாகியது. "ஐயா இதனை தடுப்பதற்கு ஏதாவது வழிவகைகள் உள்ளனவா" என அவள் கேட்டாள். அதற்கு வசிட்டரும் "உன்னாலே மூன்று விடயங்களை செய்ய முடிந்தால் இந்தப் பேரழிவு நிகழ்வதைத் தடுக்கலாம்" எனக் கூறினார். "ஒன்று நீ யாரையும் அவமானம் செய்யக் கூடாது. இரண்டாவது யாராவது உன்னை அவமானம் செய்தால், நீ அதனையிட்டு கோபம் அடையகூடாது. மூன்றாவது அவ்வாறு நீ கோபமடைந்தாலும் பழிக்குப் பழி வாங்கக்கூடாது" எனக் கூறினார். திரௌபதியும் அது மிகவும் எளிமை யானது எனக் கூறி அதனை ஏற்றுக் கொண்டு சென்றுவிட்டாள். காலங்கள் உருண்டோடின. ஒரு நாள் நண்பர்கள் படை சூழ வலம் வந்த துரியோதனன் அங்கே இருந்த பளிங்குத் தரையை, நீர் தடாகம் என நினைத்து, தண்ணீரில் நடப்பதுபோல் நடந்தான். அதனைக் கண்ட திரௌபதி பெரிதாக சிரித்து விட்டாள். அச்செயலால் கோபமும் அவமானமும் அடைந்த துரியோதனன் அவளை பழிக்குப் பழி வாங்கினான். இதனால் கடும் கோபமும் பெருத்த அவமானமும் கொண்ட திரௌபதி இதற்கு நான் பழிக்குப்பழி வாங்குவேன் என சபதம் செய்தாள். அதன் காரணத்தால் மகாபாரதப் போர் வெடித்தது.

இது பல்லாயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னர் நடந்த பழைய கதை. ஆனால் இன்றும் வீட்டிலும் நாட்டிலும் உலகத்திலும் ஏதோ ஒரு வகையிலே மகாபாரதப் போர் நடைபெற்றுக் கொண்டு தான் உள்ளது. குடும்பத்தில் பிரச்சனை, வேலையில் பிரச்சனை, மற்றும் உடல் உளம் சம்பந்தமான பிரச்சனைகள் என நாற்புறமும் இருந்து அம்புகள் நம்மை நோக்கிப் பாய்ந்த வண்ணம் உள்ளன. அவை போதாதென்று அதற்கு மேலே தொற்று நோய் ஒன்று உலகத்தையே ஆட்டிப் படைக்கின்றது. இவை எல்லாவற்றினதும் மத்தியில் நமது உள்ளம் அமைதி, ஆனந்தம் என ஏங்குகிறது. இந்தச் சொற்களைக் கேட்பதே அரிதாக இருக்கும். இந்தக் காலகட்டத்தில் அவற்றை உணர்வது என்பது நிச்சயமாக எட்டாக்கனியாகவே உள்ளது.

அர்ஜுனனுக்கு வழிகாட்டுவதற்கு அன்று கிருஷ்ணர் இருந்தார். இன்று கூகிள்தான் நம்மில் பலரதும் முதன்மை வழிகாட்டியாக உள்ளது. அதில் மக்களுக்கு வழிகாட்டுவ தாகச் சொல்லும் பலரும் நம்மை இருளில் இருந்து ஒளிக்குக் கூட்டிச் செல்வதற்குப் பதிலாக இருளில் இருந்து மேலும் இருளிற்குக் கூட்டிச் செல்வோராகத்தான் உள்ளனர். ஒருபொழுதும் இல்லாதவாறு இன்று தொழில்நுட்பம் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. கல்வி கற்றவர்களின் தொகை மிகவும் அதிகமாக உள்ளது. முன்னர் ஒரு பொழுதும் இல்லாதவாறு இன்று இந்த உலகில் அதிக அளவு தங்கம், வைரம், பணம் என செல்வம் நிறைந்துள்ளது. இவையெல்லாம் ஒரு மனி தனுக்கு ஆனந்தத்தையும் அமைதியையும் தரும் என எண்ணினால் நாம் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இப்பொழுது ஆனந்தமாகவும் அமைதி யாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நாம் உலகத்தைப் பார்த்தோம் என்றால் அதற்கு எதிர்மாறாகத்தான் நடைபெறுகிறது.

முன்னொரு காலத்தில் மக்கள் மிகவும் அன்புடனும் கருணையுடனும் இருந்தனர். தமது வீடுகளுக்கு முன்னாலே ஒரு திண்ணையை அமைத்து வருவோர் போவோர் அமர்ந்து இளைப்பாறி செல்வ தற்கு வழி செய்தனர். ஆனால் இன்று கோபமும் விரக்தியும் வெறுப்பும் தலைதூக்கி நிற்பதை காணக்கூடியதாக உள்ளது. இதிலிருந்து ஏதோ ஒரு செய்தி நமக்கு மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. எவையெல்லாம் நமது வாழ்க்கையின் தரத்தை அதிகரிக்கும் என எண்ணினோமோ அவை அவ்வாறு செய்வது போலத் தெரியவில்லை.

நாட்டைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் நம்மால் பெரிதாக எதுவும் செய்ய முடியா விட்டாலும் நமது தனிப்பட்ட வாழ்க்கை யிலே அந்த மூன்று விஷயங்களையும் நாம் பின்பற்றுவதற்கு முயற்சி செய்தோம் என்றால் குறைந்த பட்சம் நமது வாழ்க்கையில் அந்தப் போர்கள் இடம் பெறுவதை தவிர்க்க முடியும். அவ்வாறு வீட்டிலே ஏற்படுகின்ற மாற்றம் நமது கிராமத்திலும் நகரத்திலும் ஏற்படும் பொழுது அது இந்த உலகத்திலேயே ஒரு நல்ல மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுக்க முடியும். ஆனால் இந்த மாற்றங்கள் ஒரு நாளிலே ஏற்படப் போவதில்லை. ஆனால் அது இலகுவான விஷயமாக இல்லாவிட்டாலும் மெதுவாக மெதுவாக முயற்சி செய்யும் பொழுது அதுவே நாளடைவில் நமது இயல்பாக மாறி நாம் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கு வழி வகுக்கும்.

வாழ்நாள் முழுவதும் காடுகளில் சுற்றித் திரிந்த காட்டு குதிரைகளை விசிலடித்து

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

## BASEMENT FOR RENT

*BIRCHMOUNT & ELLESMERE*
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
Couple, students, seniors preferred.
**416.492.6817 / 647.403.0893**

---

*VICTORIA PARK & LAWRENCE*
1 bedroom bsmt for rent at a beautiful location. Sep. entrance, parking. Closet to TTC, Park & Hindu temple.
Ladies preferred.
**416.288.9575 / 647.762.9575**

---

*NEILSON & SHEPPARD*
1 bedroom bsmt for rent. Room also available. Couple or female preferred. Close to Malvern Town Center.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:*Call 416.875.4257*

---

*WARDEN & FINCH*
1 bedroom bsmt for rent. Parking, laundry, cable, internet. Single/couple preferred. Close to all facilities.
Avail. June 01, 2022.
**Call 416.756.4258**

---

*MORNINGSIDE & SHEPPARD*
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416-509.5750**

---

*MARKHAM & EGLINTON*
***1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, renovated kitchen & beautiful backyard view. Avail. May 1st, 2022.***
தொடர்புகளுக்கு: **416-433.0896**

---

*MORNINGSIDE & SHEPPARD*
***2 bedroom walk-out bsmt apt. for rent. Sep. entrance. Small family preferred.No pets , No smoking. Avail. June 1st, 2022.***
தொடர்புகளுக்கு: **416.834.1081**

---

*MCLEVIN & NEILSON*
***Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep.entrance,2 parking, sep. laundry.Close to allfacilities. Avail. immediately.***
தொடர்புகளுக்கு: **647.707.2587**

---

*BIRCHMOUNT & SHEPPARD*
***2 bedroom bsmt for rent. Sep. entrance. Students couple or small family preferred. Avail. May 01, 2022.***
தொடர்புகளுக்கு: **416.899.9199**

---

*BELLAMY & ELLESEMERE*
***3 bedroom bsmt for rent. Sep. entrance., parking, laundry. Close to all facilities. Avail. Immediately.***
**437.239.4596 / 437.488.8492**

---

**WESTNEY & HWY 401 (AJAX)**
1 Bedroom BSMT for rent. Sep. entrance, 1 parking, laundry. Rent+30% utilities. No smoking / no pets. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.885.5676**

மேலும் பக்கங்கள் 13,15,16,17

32ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**NEILSON & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep.ent, parking. Closeto all facilities.
Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.587.9118**

---

**AJAX**
2 Bedroom bsmt for rent.
Closeto all facilities.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## ROOM FOR RENT

*PHARMACY & FINCH*
One room for rent in upstairs. Sep. washroom. Close to all facilities.
Avail. May 15 , 2022.
தொடர்புகளுக்கு:: **416.201.1222**

---

*TAPSCOTT & MCLEVIN*
A large bedroom for rent in a townhouse. Sharing the house with another female. Internet, parking, laundry. Only female tenant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.262.4973**

---

**MARKHAM & SHEPPARD**
1 bedroom for rent in house. Ladies preferred. Avail. immediately.
Close to all amenities.
தொடர்புகளுக்கு: **647.339.2560**

---

**WARDEN & FINCH**
Room for rent with food. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.667.0482**

---

**BRIMLEY & EGLINTON**
2 Room for rent. Laundry.
No smoke. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.294.0193**

---

**MARKHAM & 14Th AVENUE**
***1 bachelor Bedroom for rent. Parking, laundry, utilities. Close to school, shops, park & YRT. Avail. immediately.***
**(647) 500-4564 / (905) 472-1370**

## BASEMENT FOR RENT

*MCCOWAN & EGLINTON*
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, 24 hrs. bus stop, Go Station. Small family / Couple preferred. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு: **416.737.0049**

## BASEMENT FOR RENT

*MIDDILFIELD & FINCH*
Basement for rent. Sep. entrance. Male preferred. Close to TTC & all other facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## BASEMENT FOR RENT

*MORNINGSIDE & ELLESMERE*
2 bedroom brand new bsmt for rent. City permitted. Sep. entrance, 2 full washroom, internet. 10 mins. walk to U of T. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.201.6075**

## BASEMENT FOR RENT

*BIRCHMOUNT & STEELES*
1 Bedroom bsmt for rent. Sep. entrance, internet, parking, laundry. 5 mins walk to Kennedy. ***No Pets***. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.936.2346**

## BASEMENT FOR RENT

*MCCOWAN & STEELES*
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school & other facilities. Couple / small family/ working Ladies.
Avail. immediately.
**905.471.1406 / 416.627.5184**

## BASEMENT FOR RENT

*NEILSON & FINCH*
3 Bedroom & 2 Bathroom bsmt for rent. Sep. entrance, laundry, parking. Spacious living room, dinning room & kitchen. Close to HWY 401& 24 hrs. bus route.
Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு: **647.989.0463**

## *BASEMENT FOR RENT*

*STAINES & STEELES*
***2 Bedroom Basement Apt., One Washroom, Sep. entrance, Laundry, 1 parking, 24 hr. bus stop walking distance. Avail. immediately.***
**647-986-1096 / 416-824-0362**

## HOUSE FOR RENT

*NEILSON & SHEPPARD*
**4 bedrooms house for rent.**
தொடர்புகளுக்கு: **416.409.6480**

## BASEMENT FOR RENT

*MCCOWAN & STEELES*
2 Bedroom Basement for rent. Sep. entrance. Parking, laundry. 3 minutes walking distance to steeles Road. Steps to school. No pets & No Smoke.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.991.4437**

## BASEMENT FOR RENT

*BROCK & KINGSTON*
1bedroom brand new bsmt for rent. Sep. entrance, walking distance to Pickering Town center, close to transportation. No pet & No smoking. Avail. immediately.
**416-731.8542 / 416-301.4783**

## BASEMENT FOR RENT

*FINCH & TAPSCOTT*
1 Bedroom Bsmt for rent. Sep. entrance. No Parking. Close toTTC & etc. Couple or female students preferred.
தொடர்புகளுக்கு: **416.726.4186**

## *BASEMENT FOR RENT*

*ALTONA & SHEPPARD*
***Brand new1 bedroom + den bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet. 30% utilities. Avail. immediately.***
**416.528.4462 / 416.301.0312**

## *BASEMENT FOR RENT*

*MCCOWAN & LAWRENCE*
***2 Bedrooms & 2 washrooms bsmt for Rent. Close to mall, library, hospital & 24 hrs. TTC. Avail. May 01, 2022.***
தொடர்புகளுக்கு: **416.904.7212**

## *BASEMENT FOR RENT*

*KINGSTON & ELLESMERE*
***3 Bedroom bsmt for rent. 1 ½ washrooms. Sep. entrance, parking, laundry. Close to HWY 401 & all other facilities. No pets. Avail. immediately.***
தொடர்புகளுக்கு: **647.501.6607**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT
### MCCOWAN & FINCH
1 Room for rent in a bsmt. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**416.825.0566**

## CONDO. FOR RENT
***MARKHAM & DENISON***
2 Bedroom plus Den & 2 washroom Condo. for rent. 1 underground parking, visitor parking & gym. Close to Spiceland, Costco, Home Depot , Community Center, Public transit & HWY 407 & all other facilities. No pets, no smoking. Avail. July 01, 2022.
தொடர்புகளுக்கு**: 647.448.7552**

## BASEMENT FOR RENT
***MORNINGSIDE & OLD FINCH***
***3 Bedroom bsmt with 2 washrooms for rent. Sep.entrance, parking, laundry. Close to hiwy 401, bus stop, shool and all other facilities. Avail. May 01, 2022.***
தொடர்புகளுக்கு: **647.760.3620**

## BASEMENT FOR RENT
***MARKHAM & STEELES***
***1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Walking distance to Amazon & close to all other facilities. Students /couple /small family. preferred. Avail. immediately.***
தொடர்புகளுக்கு: **647.780.6075**

## ROOM FOR RENT
### WARDEN & FINCH
1 bedroom for rent.
Rent & Utility included.
Available Immediately.
தொடர்புகளுக்கு:
**437.929.6639**

## BASEMENT FOR RENT
### MARKHAM & HWY 7
3 bedroom+den basement for rent. Sep. entrance. 2 parking, 2 washroom. Avail. immediately.
**Room also available.**
தொடர்புகளுக்கு: **613.970.8333**

## HOUSE FOR RENT / SALE
***RITSON & HWY 401 - Oshawa***
இற்கு அருகாமையில் ***3 bed rooms, 2 full washrooms, Walkout basement. 3 bedrooms & 2 full washrooms.***
***Everything renovated.***
தொடர்புகளுக்கு: ***905. 244 .5639***

## HOUSE FOR RENT
***MARKHAM & 16 th AVENUE***
4 Bedrooms house for rent. 2+1 washrooms. Including 2 bedroom bsmt with kitchen & washroom. 3 car parking. Close to South Asiyan, Go station, No Frills, food Basics. Avail. June 15th , 2022.
தொடர்புகளுக்கு***: 647.405.1962***

## HOUSE / BASEMENT FOR RENT
***MARKHAM & DENISON***
4 Bedroom House for rent. Also 2 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to all facilities. Avail immediately.
***647.858.2290 / 647.534.9897***

## ROOM FOR RENT
***MARKHAM & EGLINTON***
***Room for rent in a 2 bedroom apt. Rent includes Internet & utilities. Close to TTC & all other facilities. Parking available for fee. Avail. immediately.***
தொடர்புகளுக்கு: **416.568.1977**

## BASEMENT FOR RENT
***MORNINGSIDE & FINCH***
***3 Bedroom bsmt for rent. Sep. entrance & Laundry, 2-2 Parking (Double Garage) No Pets, No Smoking. Avail.May 01, 2022.***
***416.729.9858 / 416.735.4240***

## BASEMENT FOR RENT
### MARKHAM & 14th AVE.
2 bed room bsmt for rent.
1 washroom, Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.296. 7932**

## ROOM/BASEMENT FOR RENT
**BELLAMY & ELLESMERE**
***2 Rooms*** are available on upstairs. Avail. immediately. Working women only.
**Walkout bsmt** for rent.Laundry, 1 parking is permitted. Avail. immediately. Closed to TTC. Working people only.
தொடர்புகளுக்கு: **(647) 852-6807**

## HOUSE FOR RENT
***NEILSON & SHEPPARD***
***3 bedrooms. 2 washrooms. Landry available. Upstairs house. Parking available. Close to 401 and school.***
தொடர்புகளுக்கு: **647.866.9464**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
One bedroom for Rent. All inclusive. Avail. immediately. தொடர்புகளுக்கு**:**
**416.522.3314**

## ROOM FOR RENT
**KENNEDY & EGLINTON**
1 Room for rent in a 2 bedroom aprt. Working Students, 65+seniors preferred. Close to TTC, Kennedy subway. No pets, smoking, drinking. Avail. immediately
**416.857.5252 / 416.752.4444**

## HOUSE / BASEMENT FOR RENT
**BRIMLEY & EGLINTON**
3 Bedrooms 2 washrooms **house** for rent. 4 bedrooms 2 washrooms **Bsmt** for rent. Parking, sep. laundry. Close to school, hospital.
Avail. June 01, 2022.
தொடர்புகளுக்கு : **647.981.1997**

## வாடகைக்கு கொடுத்திட,பெற்றிட
Rooms: 5 BR, 4 BR, 3 BR, 2 BR, 1 BR APT, House, Condo, Basement GTA, Totonto, Scarborough, york, Peel, Durham, Halton ஆகிய பகுதிகளில்
**A1 Canada Rental Services**
**MR Ratha Francis Xavier**
**416.857.5252 / 416.752.4444**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## HOUSE / BASEMENT FOR RENT
***NEILSON & McLEVIN***
4 bedrooms house for rent.
Laundry, parking.
Also one bedroom for rent in the bsmt. Avail. May 01, 2022.
தொடர்புகளுக்கு: ***647.766.7779***

## HELP WANTED
***Ottawa*** இல் உள்ள தமிழ் ***Restaurant*** இற்கு அனுபவமுள்ள சமையல் ஆட்கள் தேவை. தங்குமிட ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு***: (416) 419.7548***

## JOB JOB JOB
***Cashiers Wanted immediately in Scarborough Location.***
தொடர்புகளுக்கு**:647.204.1520**

## பராமரிப்பாளர் தேவை
வயதான பெண்மணியைப் பராமரிக்கப் பராமரிப்பாளர் தேவை. சமையல் வேலை தெரிந்தவர் விரும்பத்தக்கது.
***647.667.0482 / 647.325.9186***

## JOB JOB JOB
Scarborough பகுதியில் அமைந்துள்ள Pizza Pizza Restaurant இற்கு Delivery Drivers & Pizza makers தேவை. Full time / Part time job.
தொடர்புகளுக்கு***: 647.201.6075***

## வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட
வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:
**647.402.2937**

## வாடகைக்கு
**4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது.
அழையுங்கள்- **647.861.8240**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை
**Scarborough - Victoria Park & HWY 401**
9 மாதக் குழந்தையைப் பராமரிக்கப் பெண் பராமரிப்பாளர் தேவை.
குழந்தை பராமரிப்பு அனுபவமுள்ள அல்லது குழந்தை பராமரிப்புக் கல்வித் தகைமையுள்ளவர்கள் விரும்பத்தக்கது. பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.
வேலை நேரம் மற்றும் சம்பளம் ஆகியவற்றை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு**: 416.616.7278**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for CANADA & USA.**

*Requirements:*
- *Minimum 3-4 years of experience.*
- *Cross Border experience*
- *Good Communication Skills*
- *Clean Abstract*

*Please Contact* - 416-835-6701

## HOUSE FOR RENT

**KENNEDY-LAWERENCE-MIKEMYERS**

(SUBWAY-TRAIN-BUSES & HWY 401) Very convenient location. 3 bedroom, living hall, kitchen with all facilities. Fridge ETC... 2 washrooms. 1 indoor parking. Single furnished room available for students.

Please call Tel: **416.285.4695 or 647.719.5853**

## மணமகள் தேவை

1982இல் பிறந்த இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த தற்போது அயர்லண்ட் இல் வாழும் படித்த மணமகனுக்கு மணமகளைத் தேடுகிறோம்.

***416.627.8832 / 647.530.5328***

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## ROOMS FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).
Contact owner about renting price.

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

**Contact :** பிறேம்-**647.835.5244**

## USED CARS WANTED

USED TOYOTA CARS, VANS WANTED. ANY CONDITION.

**Call:**
**437.688.6305**

## HELP WANTED

***Welesley & Parliament*** இற்கு அருகாமையிலுள்ள ***Convenience Store*** இற்கு வேலைக்கு ஆள் தேவை. ஓய்வு ஊதியம் பெறுபவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

***Please Contact : 416.473.8520***

## RENOVATION

- *Plumbing*
- *Painting*
- *Electric*
- *Tiles*
- *Basement*
- *Hardwood*
- *Laminating*
- *Kitchen*
- *Landscaping*
- *Interlock*

ஆகிய வேலைகள் செய்துகொடுக்கப்படும். அழையுங்கள்

***Dinesh: 647.625.2239 / drsharvin15@gmail.com***

## HELP WANTED

### *Sauter's Inn Restaurant*

***AJAX*** இல் அமைந்துள்ள ***Resturant ( Pickering Village)*** ஒன்றிற்கு உடனடியாக வேலைக்கு ஆள் தேவை. ***EVENING SHIFT 4PM -9PM***

***FULL TIME BREAKFAST COOK, KITCHEN HELPER, DISH WASHER.***

***Please call - Kumar: 905.427.6760***

***(Please Call 2:00pm to 5:00pm) 109,Old kingston Road, Ajax.***

## HELP WANTED

### *COOK & KITCHEN HELPER*

***Danforth & Pape, King & Bathrust, Dundas & Keele*** ஆகிய இடங்களில் உள்ள ***Thai Restaurant*** இற்கு உடனடியாக வேலைக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு: ***647.968.9263***

## COOK WANTED in Ajax & Oshawa

***We are Looking for experienced cook at. popular Canadian restaurants in Ajax & Oshawa. Full time & part time available.***

சம்பளம் மற்றும் சலுகைகள் பேசி தீர்மானிக்கப்படும்.

***Please Call - Mano: 647.283.8222***

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

***We are working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.***

உங்களது ***rooms , house or basement*** இனை சட்டரீதியாக ***University / College Students*** இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட

**Logee - 416.272.6811 / Hari - 647.262.8490**

***HomeLife Future Realty Inc. Brokerage***

## LINE COOK WANTED

***QUEEN & LESLIE***இல் அமைந்துள்ள ***English Pub***க்கு

***Chef and line Cook Wanted immediately.***

***FULL TIME / PART TIME Onsite parking available.***

***Call : 416.220.9179 / Email: chadsenagroup@gmail.com***

## BABYSITTER WANTED

**Scarborough - Victoria Park & HWY 401**

We are looking for a babysitter for a nine(9) month old baby. Female with previous babysitting experience or studying Early Childhood Education is preferred. University or college female students are also welcome. Flexible schedule. Salary and working hours can be negotiated.

**Contact: 416.616.7278**

## JOB JOB JOB

***14th AVENUE & MARKHAM*** பகுதியல் அமைந்துள்ள ***THE SCHOOL HOUSE RESTAURANT*** இற்கு ***Part time dishwasher*** தேவை. ***Evening shift available.***

***Please Call: Nick - 905.477.1161***

## வேலைக்கு ஆட்கள் தேவை

**VICTORIAPARK & HWY 401 (Scarborough)**இல் அமைந்துள்ள **ENGLISH PUB**க்கு Experienced **LINE COOK , COOK HELP & WAITRESS** wanted immediately. FULL TIME / PART TIME

**Please contact at 416-566-9994**

## AZ DRIVER WANTED

Hiring AZ Drivers for short haul. Keep you busy year Round 60-70 hrs/week. Paying top $$ Hourly & per miles plus HST. Come home every day. Paying weekly direct deposit. Requirement Must have proof of experience minimum of 3 years as a AZ Diver Clean driving record. Able to cross border Canada/USA. Need to have Canadian passport/ Fast card or US Visa. If you have interest in this position and meet the stated requirement.

**Please submit your resume and drivers abstract or Call Raj @ 905-297-8985 Ext. 101**

**Email: Info@casritransport.com/Fax: 905-297-8985**

## *JOB JOB JOB*

பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை. *General Labour, Finishing Carpenter, Concrete worker.* போக்குவரத்து வசதி செய்து தரப்படும். *(Will Provide Transport.)*

பின்வரும் வீட்டு திருத்த வேலைகளுக்கு உரிமையாளர்கள் அழையுங்கள்: *Custom Kitchen Cabinets, Re-Modeling Washrooms, House Extension, Underpinning Concrete Driveway, Wood decks, Egress Window, Separate Entrance, Electrician, Plumber, Architect & Engineering Drawing.*

*Please Call or Text (416) 573-5114*

## *JOB JOB JOB*

***MISSISSAGUA*** இல் உள்ள ***PIZZA STORE*** இற்கு ***DELIVERY DRIVER*** தேவை. ***Full time job available. Salary plus Tips.***

தொடர்புகளுக்கு: ***: 647.518.8447***

## *COOK & KITCHEN HELPER WANTED*

***Danforth & Coxwell, Yonge & Bloor*** இல் உள்ள இரண்டு ***Restaurant*** இற்கு ***Cook & Kitchen helper*** தேவை. ***FULL TIME & PART TIME.***

தொடர்புகளுக்கு: ***416.999.7015 / rasiah@live.ca***

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

ஒத்து வராதவைகளிடம் இருந்து ஒதுங்கி நிற்கவும், தேவை இல்லாதவர்களை ஒதுக்கி வைக்கவும் கற்றுக்கொண்டால், வரும் துன்பத்தில் பாதியைக் குறைக்கலாம்.

## *LAUNDRY BUSINESS FOR SALE*

***Business only sale. 900 Sqft. Surrounded by apartment Buildings, Over 20 years business. New Maytag washer 12 nos, Dryers 16 nos, Tank less water heater, Gross rent $2,260, OSHAWA - TAUNTON / SIMCOE***

***Please Call: Raja - 416.315.9397***

**HOMELIFE/GTA REALTY INC. Brokerage***

**5215 Finch Ave.. E. #203, Toronto, ON M1S 0C2**

• Independently Owned and Opeated

## Restaurant வேலைக்கு ஆட்கள் தேவை

**Windsor ON, London ON, Milton ON** இல் புதிதாகத் திறக்கப்படவுள்ள **Restaurant**க்கு **Canadian, Srilankan, Italian, Indian** மற்றும் **Bakery**இல் சமையல் அனுபமுள்ளவர்கள் ஆர்வமிருந்தால் தொடர்புகொள்ளவும்.



சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்கும் இடவசதி தேவை ஏற்பட்டால் ஒழுங்கு செய்து தரப்படும்.

அத்துடன் **Working partner** ஆக இணைய விரும்புபவர்களும், **Restaurant** ஐ வாடகைக்கு எடுத்து நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : **416.294.9677**

## LAND FOR SALE

**9th Line and Main St. Stouffville**

Site plan approved for 12 townhouses

Asking $5.2M

**Contact: Gulshan Sharma** Broker

**416.321.6969**

**HOMELIFE GTA REALTY INC.** Brokerage*

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

## Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

### Available for Rent

**Markham – Middlefield/Denison- Bsmt**
**(2Brm + 1Bath) [$1450/m]**
**Toronto Lake/East Ave/Broadbridge - Detached**
**(4 Brm +3Bath) [$3490/m]**
**Toronto – Markham/Mcnicoll - Bsmt**
**(2Brm +2Bath) [$1999/m]**
**Toronto – Mccowan/Lawrence – Detached Bungalow**
**(2+1Brm +2Bath) [$3450/m]**
**Toronto – Ellesmere/Military Trail - Room**
**(1Brm +1Bath) [$1000/m]**
**Toronto – East Liberty-Condo**
**(1Brm +1Bath) [$2100/m]**
**Toronto – Mccowan/Lawrence - Detached**
**(3Brm +1Bath) [$2500/m]**

### Available for Rent

**Oshawa – Britannia/Ritson - Detached**
**(4Brm +4Bath) [$3900/m]**
**Oshawa – Townline Rd/Shankel Rd - Detached**
**(4Brm +3Bath) [$3400/m]**
**Whitby – Coronation Rd/Taunton Rd W -Semi-Detached**
**(4Brm +3 Bath) [$3200/m]**
**Ajax – Bayly/Monarch- Att/Row/Townhouse**
**(3Brm +3Bath) [$2700/m]**
**Pickering – Whites Rd/Kingston Rd- Condo Townhouse**
**(2Brm + 1Bath) [$2675/m]**
**Clarington – Middle Rd/William Fair Rd- Condo Town House**
**(2Brm + 1Bath) [$2000/m]**
**Beaverton – Simco st/Mara Rd- Detached**
**(4Brm + 3Bath) [$2800/m]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களை எப்படி தேர்ந்தெடுத்துக் கொடுப்பது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வாழ்ந்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் எனது 32 வருட அனுபவம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

கரு கந்தையா **- 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of**
**Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

## For Rent in Ajax



***2 Bedroom (Basement)***

- *Walk out*
- *1 Full Washroom*
- *Separate Laundry*
- *1 Parking available*

**ROSSLAND / RAVENSCROFT**

உங்கள் ஆதனங்களை விற்க /வாங்க /வாடகைக்குக் கொடுக்க எங்களை நாடுங்கள்.

Please call: **George Paranthaman - 416.277.9044**

**HOMELIFE/GTA REALTY INC.** Brokerage*

**5215 Finch Ave.. E. #203, Toronto, ON M1S 0C2**

• Independently Owned and Opeated

## தமிழ்ப்பூங்காவின் பாடுங்குயில்-2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 4 முதல் 12வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: May (வைகாசி) 31, 2022.

விபரங்களுக்கு: ***647.706. 6123***

***3001 Markham Road #21, Scarborough, ON M1X 1L6***

அம்மாவுக்கென்று
தனியாகக் கவிதை
வேண்டாம்.
அன்பாகப் பழகிப் பார்
அம்மாவே கவிதை தான்.
அன்னையர் தின
வாழ்த்து.



## யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# A New Project by

TRIDEL®
BUILT FOR LIFE

## @ 60 Queen St. East, Toronto
## (Queen + Church)



- 57 Storeys
- 445 Units
- 2 Blocks East of Yange Street
- Height 60Ft. (185.9m)

Developers : TRIDEL & BAZIS
Architect : Core Architect

For More information Feel Free to Call .....

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
**Tel: 416-321-6969** * Independently owned and operated.

## NOW



## FUTURE



# ENDLESS
## Development Possibilities

## 401 DUNLOP STREET EAST - WHITBY
### Live. Shop. Dine. Stroll.

- Minutes to the water's edge
- R4 Zoned for multiple uses - Multi-Residential including retirement living
- Located in the heart of Downtown Whitby

**CONTACT ME FOR FULL DETAILS!**

RE/MAX REALTRON REALTY INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED

**Dee Sarwan**
Sales Representative
(416) 917.8893
deesarwan.com
dee@deesarwan.com



SCAN FOR DETAILS










# எல்லாவற்றிலும் சிறந்த பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்

ஒவ்வொரு சிறு உரையாடலிலும் குறைந்தளவு மூன்று “தயவு செய்து”களும் இரு “நன்றி”களும் கூறப்படும் என்று ‘Watching the English’ என்னும் புத்தகத்தில் ஆசிரியர் Kate Fox கூறியுள்ளார். இது ஒரு சிற்றெல்லை மட்டுமே. சில கலாசாரங்களில் பணிவுத் தன்மை அதிகமாக இருந்தாலும் அதில் ஒரு தவறும் இல்லை. நாம் தினமும் பலருடன் பழக வேண்டியிருக்கிறது, எனவே, கொஞ்ச நல்ல பழக்க வழக்கங்கள் இருப்பது நன்மையே. எனது கொள்கைகளைப் பின்பற்றுவோர் எப்பொழுதும் சிறந்த பழக்க வழக்கங்களைக் கையாளுவர். சிறந்த பழக்கவழக்கம் என்றால் என்ன எனத் தெரியாவிட்டால், அது உங்களுக்குப் பிரச்சனை.





உங்களை நல்ல பழக்கவழக்கங்கள் உடையவர் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் நீங்கள் அவசரப்படும் போதும் மன அழுத்தத்தில் இருக்கும் போதும் இந்தப் பழக்கவழக்கங்கள் நழுவிவிடும். நாம் அனைவரும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், அவசரத்தில் இருக்கும்போது ஒருத்தருக்கு நன்றி தெரிவிக்க மறந்தும், விரைவாகச் செல்லும்போது மெதுவாகச் செல்பவர்களை இடித்துச் செல்லவும் எண்ணியிருக்கிறோம்.

எனது கொள்கைகளைப் பின்பற்றுவோர் அதிகமாக அந்தரப்படமாட்டார். அப்படியும் அவசரப்பட்டால், நீங்கள் எப்போதும் இந்தப் பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும்:

* இடிக்காமல் வரிசையில் நிற்றல்,
* தேவையான நேரத்தில் தகுதி பெற்றவர்களைப் பாராட்டுதல்,
* தேவையில்லாத இடத்தில் மூக்கை நுளைக்காது இருத்தல்,
* சொன்ன வார்த்தையைப் பின்பற்றுதல்,
* இரகசியத்தை வெளியே சொல்லாமல் இருத்தல்,
* உண்ணும் போது முறையாகச் சாப்பிடுதல்
* சாப்பிடும் போது முழங்கையை மேசையில் வைக்காதிருத்தல்





* வாயில் உணவு இருக்கும்போது பேசாதிருத்தல்
* ஒரே நேரத்தில் அதிக உணவை வாயில் வைக்காதிருத்தல்
* சாப்பாட்டுத்தட்டில் இருக்கும் உணவுடன் விளையாடாமல் இருத்தல்
* நீங்கள் செல்லும் வழியை மறைப்பவர்களை ஏசாமல் இருத்தல்,
* நீங்கள் பிறரின் வழியை மறைத்தால் அவர்களிடமிருந்து மன்னிப்புக் கேட்டல்,
* சமாதானமாக இருத்தல்,
* கடுமையான சொற்களையும் கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்தாமல் இருத்தல்,
* பொது இடங்களில் பிறருக்காகக் கதவைத் திறத்தல்,
* பிறர் அவரசமாகச் செல்லும்போது அவர்களுக்காக வழி விடுதல்,
* ஒருவர் உங்களைக் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லுதல்,
* பிறருக்கு வணக்கம் சொல்லுதல்,
* பிறர் உங்களுக்கு உதவி செய்தால் நன்றி கூறுதல்,
* விருந்தோம்பல்,
* பிறர் கலாசாரங்களின் வழக்கங்களை மதித்தல்,
* கடைசியாகத் தட்டில் இருக்கும் சிற்றுண்டியை எடுக்காமல் இருத்தல்,
* மரியாதையாகவும் நட்பாகவும் பழகுதல்,
* விருந்தினருக்குத் தண்ணீர் கொடுத்து, அவர்கள் செல்லும்போது முன் கதவு வரைக்கும் செல்லுதல்.

நீங்கள் ஒரு நாளைக்கு எத்தனை பேருடன் பழகினாலும், நல்ல பழக்கங்களைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். நல்ல பழக்கங்களுக்கு விலை இல்லை. ஆனால் அவை நல்ல கருத்துகளை உண்டாக்கி, எல்லோருக்கும் வாழ்க்கையை எளிதாக்கி விடும்.

Richard Templar எழுதிய 'The Rules of Life'இன் மொழிபெயர்ப்பு.

## இயற்கை அன்னை

இனிக்கும் சிறந்த இயற்கை அன்னையின்
அழகினில் இறைவன் இருக்கின்றான்
அவன் இந்த உலகில் வாழும் உயிர்கட்கு
பூரண இன்பம் தருகின்றான்

வானும் நிலவும் கதிரவனும் மலையும் கடலும்
பூமியில் வாழும் உயிர் இனங்களை வாழவைக்க
இறைவன் படைத்த இயற்கை
வண்ணக்கோலங்கள்


ஆற்றல் கொண்ட பூதங்கள் ஐந்தில் கண்ணால்
பார்க்க முடியாது உணர்வல்ல ஒன்றாய்
நுழையமுடியாத இடத்துக்குள் நுழைந்து
சுவாசிக்க வல்ல காற்றாய் வருகின்றாள்

மலை அடிவாரத்தில் வீழ்ந்து மருவி ஓடி
மண்ணில் ஆறாய் பாய்கின்றாள்
அக்கரையில் நின்று அள்ளிப் பருகி
தாகம் தீர்க்க நீராய் வருகின்றாள்

வித்தாகி மண்ணுக்குள் மறைவாகி யாருக்கும்
தெரியாமல் முளையாகி வேராகி துளிராகி
வானுயர இலை கொள் பெரு மரமாகி
இளைப்பாற நிழலாக நிற்கின்றாள்

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே நடக்கும்
இசைக்கச்சேரி போன்று காற்றுடனும்
இடி மின்னலுடன் கூடி மண்ணை
முத்தமிட மழையாய் பொழிகிறாள்

வர்ணங்கள் ஏழு இயல்பாய் தெரிய
வானத்தில் வில்லாய் வளைந்து தெரிகின்றாள்



காணும் உள்ளங்களின் மனதைத் தொட்டு அவள்
கொள்ளை இன்பம் தருகின்றாள்

உலகில் ஒளிரும் ஞாயிறாகத் தினமும்
வானில் உலவி வருகின்றாள்
இரவின் இருளை அகற்ற ஒளியை கொடுத்து
விடியலை தருகின்றாள்

இயற்கை அழகில் இறைவன் இருப்பதை
உணராத மனிதர்களோ இயற்கையை அழிக்கின்றனர்
இதைப்பொறுக்க முடியாத இறைவன் இன்று
கொறோனாவை விட்டு மனிதரை அழிக்கின்றான்
எம்மை வாழவைக்க இறைவன் தந்த
இயற்கை அன்னையைக் காப்போம்
இங்கிதமாக வாழ்வோம்.

கவிநாதம் பரந்தாமன்

